
மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly february 2015

விலை : ரூ.10/- இல்லம் : 3 சுற்றம் : 2 ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி




## தமிழனுக்கு தமிழின் பெருமையை ஆங்கிலத்தில் சொன்னால்தான் புரியுமா?

# இந்து என்பது என்ன?





பண்பாட்டுப் புரட்சி இல்லாது!
அரசியல் புரட்சி வெல்லாது!
வீரத்தமிழர் முன்னணி
நாம் தமிழர்
முப்பாட்டன் முருகன்
தமிழ்த்தாய்
இராவணப் பெருந்தகை
தமிழ் மறையோன்
துவக்கவிழா பேரணி – பொதுக்கூட்டம்
நாள்: 07.02.2015 – சனிக்கிழமை
பேரணி : பழனியாண்டவர் கலைக்கல்லூரி, பழனி நேரம்: மாலை 4.00 மணி
தமிழர் கலைநிகழ்ச்சிகள், பொதுக்கூட்டம்: மாலை 6 மணி
பண்பாட்டு மீட்சியுரை
செந்தமிழன்
சீமான்
தடா.சந்திரசேகர் - கலைக்கோட்டுதயம் - தமிழ்முழக்கம்.சாகுல்அமீது - கோட்டைக்குமார்
நெல்லை.சிவக்குமார் - செ.வெற்றிக்குமரன் - அன்புத்தென்னரசன் - நல்லதுரை - கார்வண்ணன்
மறத்தமிழ்வேந்தன் - திலீபன் - அமுதாநம்பி - சுந்தரவந்தியத்தேவன் - தங்கராசு
மாநில இளைஞர் பாசறை
மணிசெந்தில் - அறிவுச்செல்வன் - கலியாணசுந்தரம் - துருவன் - ஜெகதீசபாண்டியன்
பாலமுரளிவர்மன் - மதிவாணன் - தமிழினியன் - தமிழ்செல்வன் - கார்த்திக்
மாநில மாணவர் பாசறை
தேவா - இடும்பவனம்.கார்த்திக் - தமிழ்ஈழன் - அருண் - விக்னேசுவரன் - சுடலைராசு
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு
வழக்கறிஞர்.கணேசன் – செங்கண்ணன் – வடிவேலு – அன்பழகன்
சண்முகம் – செல்வம் – பூலித்தேவன் – வினோத் – சுபாஷ் சந்திரபோஸ்
சின்னமாயன் – வினோதன் – சிவசங்கரன் – இராசா – சரவணன் – கதிரேசன்
பண்பாட்டை மீட்டெடுக்க...
பகை மிரள... பழனியில் திரள்வோம்...
பைந்தமிழர் இனத்தீரே...
நாம் தமிழர் கட்சி
திண்டுக்கல் மாவட்டம்
உறவாய் இணைய: 98421 77999 / 98421 24783
99522 41010 / 91503 68855

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly february 2015

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம் .ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** பி.ஏ.,
**ஜோசுவா**
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**ஜுட்**
**பெ. அர்ஜுன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
V.**கணேஷ்** திருவல்லிக்கேணி
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**

அலுவலக முகவரி
13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

இந்து என்பது என்ன?
*தலையங்கம்*..........4

நாடு முழுவதும் நிலுவையில் இருக்கும்
3 கோடி வழக்குகள்.......... 6

ஜல்லிக் கட்டு போட்டி
மேற்கத்திய கலாச்சாரம் ..........7

சீவகசிந்தமணி – அறிமுகம்
புலவர் கு. ஏழுமலை.......... 9

முகநூல் செய்தி பரிமாற்றம்..........13

தமிழனுக்கு தமிழின் பெருமையை
ஆங்கிலத்தில் சொன்னால்தான்
புரியும் போலிருக்கு!.......... 14

சிங்கள மண்ணின் இனவெறித் தலைவர்கள்
கவிஞர் காசி ஆனந்தன்.......... 16

உண்மையைத் தேடி ..........19
இராஜாசிங்

இசைப்பல்கலைக் கழகத்தின் செயல்பாடுகள்
அரசின் கட்டுப்பாட்டில்தான் உள்ளதா?.......... 23

புரட்சிக் கவி (கவிதை)
பாவேந்தர் பாரதிதாசன்.......... 25

கொலைகாரக் கொள்ளையன்
இராசபட்சே ..........27

இழப்பீடு பெற பாலின பாகுபாடு கூடாது
உயர்நீதிமன்றம் அறிவுரை ..........29

தோழர் பெ.மணியரசன் பேச்சு ..........31

மூடநம்பிக்கைகளை புகுத்தும்
தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
பொன்முடி.......... 33

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் “mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.

# இந்து என்பது என்ன?



எப்போதாவது சிறு மன வேறுபாடுகள் இந்திய மக்களிடையே எழுந்தாலும் இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு என்பதை அனைவரும் மனதில் கொண்டு அமைதியோடு வாழ்ந்து வந்தனர். இதுவரை சுதந்திர இந்தியாவை ஆண்ட நடுவண் அரசுகள் மதப்பிளவுகளுக்கு, மதத்தின் மூலம் எழும் சச்சரவு, சண்டைகளுக்கு இடம் கொடுக்காமல்தான் இருந்தன. வாஜ்பாயைப் பிரதமராகக் கொண்டிருந்த பா ச க அரசும் கூட அப்படித்தான் நடந்து கொண்டது. காரணம் அந்த நேரத்தில் பெரும்பான்மை உறுப்பினர்கள் இரு அவைகளிலும் இல்லாதிருந்ததே ஆகும்.

இன்றோ நிலைமை தலைகீழாகிவிட்டது. அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அரசாக பா ச க இன்று இந்தியாவை ஆள்கிறது. அதனால்தானோ என்னவோ இந்துத்வா என்ற ஒன்றை நாடுமுழுதும் தனது அதிகாரப் பலத்தின் மூலம் புகுத்திட முயலுகிறது.



மதச்சார்பின்மை என்பதற்கு ஆதாரமாக இருக்கும் வார்த்தைகளை நீக்குவது, இந்துகள் தவிர பிறரை முறைதவறிப் பிறந்தவர்கள் என்பது, இஸ்லாமியப் பள்ளிகளில் சரஸ்வதி வந்தனத்தைக் கட்டாயமாக்குவது, தேவாலயங்களை உடைப்பது, கிறிஸ்துமஸ் தினத்திற்கு அரசு விடுமுறை இல்லை என்பது, வாஜ்பாயும், மதன் மோகன் மாளவியாவும் பிறந்தது டிசம்பர் 25ஆம் தேதிதான். ஆகவே அவர்களைப் பற்றி கட்டுரை எழுத வேண்டும் என்று சொல்லி கிறிஸ்துமசின் சிறப்பைக் குறைப்பது, சமஸ்கிருதத்தை கட்டாயமாகப் புகுத்துவது, காந்தி, நேருவை மறக்கடிக்கச் செய்வது, கொலைகாரன் கோட்சேவுக்கு கோவில் சமைப்பது, இளஞ்சிறார்களுக்கான பள்ளிப்பாடப் புத்தகத்தில் காவிக்கறையைப் பூசி, மாணவர்களின் பிஞ்சு நெஞ்சுகளில் நஞ்சை விதைப்பது, பகவத் கீதையை மதச்சார்பற்ற நாட்டின் தேசியநூலாக ஆக்குவது என்று பலவிதமான தகாத செயல்களைச் செய்து வருகிறது. ஒவ்வொன்றுக்கும் எதிர்ப்புகள் வரும்போது சற்றுப் பின் வாங்குவது போல் நடிப்பது, பின்னால் வேறொன்றைச் செய்வது, யாரும் எதிர்ப்புத் தெரிவிக்காவிட்டால் அதைச் சட்டமாக்குவது என்று நடுவண் அரசு நடந்து வருகிறது.

இத்தனை நடந்தாலும் வளர்ச்சிப் பாதையில் இந்தியா என்று வெட்டி மேடைப்பேச்சை பேசிக் கொண்டு, தனக்கும் அமைச்சர்களுக்கும் அவர்களின் செயல்பாடுகளுக்கும் நான் பொறுப்பில்லை என்பது போல உலக நாடுகளைச் சுற்றிக் கொண்டிருக்கிறார் மோடி.

உலகநாடுகள் மத்தியில் இந்தியாவிற்கு மரியாதை இருக்கிறது என்றால், அதற்கு முழுமுதற் காரணம் இந்தியா ஒரு மதச்சார்பற்ற மிகப்பெரிய ஜனநாயக நாடு என்பதால்தானே தவிர, இந்துத்துவா அல்ல என்பதை மோடி புரிந்து கொண்டால் நல்லது.

இந்துத்துவா, இந்து என்று சொல்கிறார்களே, இந்து என்பது என்ன என்பதைத் தெரிந்து கொண்டு தான் பேசுகிறார்களா என்பது நமக்குத் தெரிய வில்லை. இந்த நாட்டினுடைய மண்ணின் மைந்தர் களாக இல்லாதவர்கள், வந்தேறிகள் தங்களைப் பாதுகாத்தக் கொள்ள ஒன்றாக இருந்த மக்களை, பறையர் அண்ணனாகவும் வெள்ளாள அண்ண னாகவும் கோனார் அண்ணனாகவும் செட்டியார் அண்ணனாகவும் பள்ளர் அண்ணனாகவும் தேவர் அண்ணனாகவும் நாடார் அண்ணனாகவும் சக்கி லியர் அண்ணனாகவும் இன்னும் பல்வேறு அண் ணன்களாகவும் பிரித்து, நமது பிரிவில் அவர்கள் வாழ்ந்தார்கள்.

வணிகத்துக்கு வந்த ஆங்கிலேயன் சிறு சிறு அரசுகளை எல்லாம் தன் ஆட்சிக்குள் கொண்டு வந்து அதில் வாழும் மக்கள் அனைவருக்கும் சிந்து நதி நாகரிகத்தை மனதில் கொண்டு சிந்து என்றும் பின்னர் இந்து என்றும் பெயர் வைத்தான். அதை தங்களுக்கு மிகச்சிறந்த கேடயமாக எடுத்துக் கொண்டு, மேலே கண்ட நமது அண்ணன்மார்கள் எல்லோரிடமும் “நமக்குள் சாதிதான் வேறு வேறு. ஆனால், நீங்களும் நாங்களும் இந்துக்கள்” என்று கூறி தங்களது பாதுகாப்பை, மேலான வாழ்க் கையை நிலைப்படுத்திக் கொண்டனர். அதுதான் இன்றும் தொடர்கிறது.

இந்த நாட்டிற்குச் சொந்தமில்லாத ஒரு கூட்டம் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள நடத்திக் கொண்டிருக்கும் நாடகம்தான் இந்த இந்துத்துவா. அவர்களை நம்பி, நம் அண்ணன்மார்கள் நமக்குள்ளே அடித்துக் கொண்டு அழிவது என்பது மூடத்தனம். பகுத்தறிவின் துணை கொண்டு மனிதர்களாக நாமெல்லாம் வாழ்ந்திட வேண்டும். நமது பொது எதிரி யார் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு அவர்களுக்கு உண்மையை உணர்த்தி, புத்தி சொல்லி, நாங்கள் மனிதர்களுக்கு எதிரானவர்கள் அல்ல. உங்களையும் வாழ வைப்போம். வேறு சிலர் கணவாய்கள் வழியாக வந்தாலும், காடுகளின் வழியாக வந்தாலும், புட்பகவிமானம் மூலம் வந்தாலும் அவர்களுக்கும் வாழ்வு கொடுப்போம் என்று கூற வேண்டும். ஆனால் ஏமாற மாட்டோம் என்பதைக் காண்பிக்க வேண்டும்.

அறிவு மலிந்து போன இக்காலத்தில் மலிவான இந்துத்வா நடவடிக்கைகளுக்கெல்லாம் நாம் காது கொடுக்காது மதச்சார்பற்ற நாட்டில் ஒவ்வொரு வருக்கும் இருக்கின்ற உரிமைகளை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பிறர் உரிமை களில் மூக்கை நுழைக்கக் கூடாது. பிறர் நுழைத்தால் பாடம் கற்றுக் கொடுக்க வேண்டும்.

◆


## முற்றம் இதழுக்கான விளம்பரக் கட்டணங்கள்

பின்னட்டை பல வண்ணம் ரூ. 10,000/-
பின் உள் அட்டை பல வண்ணம் ரூ. 7,000/-
கருப்பு வெள்ளை முழுபக்கம் ரூ. 5,000/-
கருப்பு வெள்ளை அரைப் பக்கம் ரூ. 2500/-
க. வெ. கால் பக்கம் ரூ. 1500/-

சந்தா விவரம்: தனி இதழ் ரூ. 10/-
ஆண்டு சந்தா ரூ. 120/-

# நாடு முழுவதும் நிலுவையில் இருக்கும் 3 கோடி வழக்குகள்!

நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் 3 கோடிக்கும் அதிகமான வழக்குகள் நிலுவையில் இருப்பதற்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஹெச். எல். தத்து கவலை தெரிவித்தார்.

இதுதொடர்பாக மாநில உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிகளுக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார். அதில், கீழமை நீதிமன்றங்களில், 5 அல்லது அதற்கும் மேற்பட்ட ஆண்டுகளாக நிலுவையில் இருக்கும் வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி நீதிபதி ஹெச். எல்.தத்து கேட்டுக் கொண்டுள்ளார்.

உச்ச நீதிமன்றத்தில் மட்டும் டிசம்பர் மாதம் 1ஆம் தேதி நிலவரப்படி, 64,919 வழக்குகள் நிலுவையில் உள்ளன. நாடு முழுவதும் உள்ள 24 உயர் நீதிமன்றங்களில், 44.5 லட்சம் வழக்குகளும், கீழமை நீதிமன்றங்களில் 2.6கோடி வழக்குகளும் நிலுவையில் உள்ளன. இதில், உயர் நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கும் 44.5 லட்சம் வழக்குகளில், 34,32,493 வழக்குகள் சிவில் விவகாரம் சம்பந்தப்பட்டவை. 10,23,79 வழக்குகள் குற்றங்கள் சம்பந்தப்பட்டவை ஆகும்.

நாட்டில் அதிகபட்சமாக, உத்தரப் பிரதேச மாநிலம், அலகாபாத் உயர் நீதிமன்றத்தில், 10,43,398 வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. குறைந்தபட்சமாக, சிக்கிம் உயர் நீதிமன்றத்தில், 120 வழக்குகள் நிலுவையில் உள்ளன. தில்லி உயர்நீதிமன்றத்தில், 64,652 வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. அலகாபாத் உயர்நீதிமன்றத்தில்தான் அதிகபட்சமாக 3,47,967 குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன.

நாடு முழுவதும் கீழமை நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கும் 2.6 கோடி வழக்குகளில், உத்தரப் பிரதேச மாநில நீதிமன்றங்களில்தான் அதிக அளவாக 56 லட்சம் வழக்குகள் உள்ளன. அவற்றில், 41,98,761 குற்ற வழக்குகள் ஆகும். தில்லி மாவட்ட நீதிமன்றங்களில், 3,81,615 குற்ற வழக்குகள் உள்பட 5,22,167 வழக்குகள் தீர்க்கப்படாமல் உள்ளன.

இதையடுத்து, நிலுவையில் இருக்கும் வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காண்பதற்கு புதிய திட்டத்தை உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ஹெச். எல். தத்து கொண்டு வந்துள்ளார். அதாவது, நிலுவையில் இருக்கும் வழக்குகளில், சமுதாய ரீதியிலான வழக்குகளுக்கு தீர்வு காண்பதற்கு, "சிறப்பு சமூக நீதி அமர்வு' ஏற்படுத்தப்பட வேண்டும் என அவர் ஏற்கெனவே கூறியிருக்கிறார் என அந்த அதிகாரி தெரிவித்தார்.



**உமா மகேசுவரி**

# 'ஜல்லிக்கட்டு போட்டி, மேற்கத்திய கலாசாரம்'

தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகையையொட்டி நடத்தப்பட்டு வந்தது. பாலமேடு மற்றும் அலங்காநல்லூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டை வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளும் வந்து பார்வையிட்டுச் செல்வது வழக்கம்.

இத்தகைய பாரம்பரியமிக்க ஜல்லிக்கட்டுக்கு சுப்ரீம் கோர்ட்டு கடந்த ஆண்டு தடை விதித்தது. ஜல்லிக்கட்டின் போது காளைகள் துன்புறுத்தப் படுவதாக கூறிய கோர்ட்டு, நாடு முழுவதும் ஜல்லிக்கட்டு மற்றும் காளை வண்டி பந்தயம் போன்றவற்றை தடைசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு அரசுகளுக்கும், விலங்குகள் நலவாரியத்துக்கும் உத்தரவிட்டது.

இந்தத் தடையை எதிர்த்து தமிழக அரசு சார்பில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. மேலும் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் கூடுதல் செயலாளரை, தமிழக கூடுதல் செயலாளரை, தமிழக அரசின் சிறப்புக் குழுவினர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனாலும் ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி கிடைக்கவில்லை.

இதனால் தமிழர்களிடையே மிகுந்த அதிருப்தி ஏற்பட்டு உள்ளது. இதனால் பாலமேடு, அலங்காநல்லூர் உள்ளிட்ட கிராமங்களில் கடையடைப்பு உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களும் நடத்தப்பட்டன.

இந்த நிலையில் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை மந்திரி மேனகா காந்தி, 2 நாள் பயணமாக தனது சொந்த தொகுதியான பிலிபிட் சென்று உள்ளார். அப்போது அவரிடம் ஜல்லிக்கட்டு தடை குறித்து பதிலளித்த அவர் கூறியதாவது:

நமது பாரம்பரியத்தில் பசுக்களும், காளைகளும் விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக விளங்குகின்றன. ஜல்லிக்கட்டு பாரம்பரியம் ஒரு மேற்கத்திய கலாசாரம் ஆகும். பா.ஜனதா இதை கடுமையாக எதிர்க்கிறது.

ஜல்லிக்கட்டில் விலங்குகள் மட்டுமின்றி மனிதர்களும் கொல்லப்படுகிறார்கள். எனவே ஜல்லிக்கட்டை தடை செய்து சுப்ரீம் கோர்ட்டு எடுத்த நடவடிக்கை வரவேற்புக்குரியது.

மகர சங்கராந்தி பண்டிகையின் போது தாவரங்களையும், மரங்களையும் போற்ற வேண்டும். ஆனால் தமிழ்நாட்டில் இந்தப் பண்டிகையின் போது விலங்குகளை கொடுமைப்படுத்துகிறார்கள். இது மிகவும் தவறு. என்று கூறியிருக்கிறார். அந்த அதிமேதாவி அமைச்சர்.



# பேரீச்சம் பழம்



பேரீச்சம்பழம் மிகவும் சத்துள்ள பழம். குழந்தைகள் முதல் பெரியோர் வரை விரும்பி உண்ணும் பழம். அரபு நாடுகளில் இருந்துதான் நாம் இப்பழத்தைப் பெறுகிறோம். பதப்படுத்தப்பட்ட பழங்கள் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் பழுதுபடாமல் இருக்கும். உடலுக்கு ஆரோக்கியம் தருவதில் பெரும் பங்கு வகிக்கிறது.

நீரிழிவு நோயாளிகள் : இந்நோய் உள்ளவர்கள் இப்பழத்தைத் தொடக்கூடாது என்று சொல்வார்கள் அதற்கு காரணம் அதன் இனிப்புச் சுவை தான். நீரிழிவு நோயினால் சத்துக் குறையும். எனவே இப்பழத்தை தினமும் சாப்பிட்ட பிற, 2 சாப்பிட்டு வந்தால், சத்துக் குறைபாட்டைத் தடுக்கும்.

சளி இருமல்: பேரீச்சம்பழத்தை கொட்டை நீக்கி, பாலில் போட்டுக் காய்ச்சி ஆறிய பின் பழத்தைச் சாப்பிட்டு, பாலையும் பருகி வந்தால் நோய்கள் குணமாகும்.

கண்பார்வை: வைட்டமின் 'கி' குறைந்தால் கண்பார்வை மங்கலாகும். இதைப்போக்க இப்பழம் பெரும் உதவி புரிகிறது. இப்பழத்தில் வைட்டமின் 'கி' அதிகம் உள்ளது. தினமும் இருவேளை இப்பழத்தை சாப்பிட வேண்டும்.

மேலும் சில பயன்கள்: மூளைக் கோளாறுகளை நீக்கும், இரத்தம் விருத்தியாகும். உடலில் மேலுள்ள தோலை வழுவழுப்பாக்கும். தொற்றுநோய்கள் அணுகாது காத்துக் கொள்ளும். எலும்பைப் பலப்படுத்தும், உடல் அசதியைப் போக்கும், மூட்டு வலிகளை நீக்கும், முதியோர்களை களைப்பின்றி செயல்பட வைக்கும்.

**புஸ்பம். திண்டிவனம்.**

## முதுமையை தடுத்து இளமை தரும் கொய்யா

பழங்களிலேயே விலை குறைவானதும், அனைவராலும் எளிதில் வாங்கி சாப்பிடக்கூடியது கொய்யாப் பழம். இதில் முக்கிய உயிர் சத்துக்களும், தாது உப்புக்களும் அடங்கியுள்ளன. கொய்யாமரத்தில் இருந்து கிடைக்கக்கூடிய கனி, பட்டை என அனைத்துமே மருத்துவகுணம் கொண்டது. வைட்டமின் பி மற்றும் வைட்டமின் சி ஆகிய உயிர்ச்சத்து களும், கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு போன்ற தாது உப்புக்களும் கொய்யா பழத்தில் நிறைந்துள்ளது.

கொய்யா மரத்தின் இளம் புதுக்கிளைகளின் மூலம் தயாரிக்கப்படும் கஷாயம் காய்ச் சலைக் கட்டுப்படுத்தும். இம்மரத்தின் பட்டை பாக்டீரியா அழுகலை தடுக்கும். காய்ச் சலைப் போக்கும். வேர்ப்பட்டை குழந்தைகளின் வயிற்றுப் போக்கினை குணப் படுத்தும்.

கொய்யாப்பழத்தை அரிந்து சாப்பிடுவதை விட பழத்தை நன்றாக கழுவிய பிறகு பற்களில் படும்படி நன்றாக மென்று தின்பதே நல்லது. இதன்மூலம் பற்களும், ஈறுகளும் பலப்படும். வேறு எந்தப் பழத்திலும் இல்லாத வைட்டமின் சி என்ற உயிர்ச்சத்து இப்பழத்தில் அதிக அளவில் உள்ளது. எனவே, வளரும் குழந்தைகளுக்கு கொய்யாப்பழம் ஒரு வரப் பிரசாதமாகும்.

உடல் நன்கு வளரவும், எலும்புகள் பலம் பெறவும் கொய்யாப்பழம் உதவும். கொய்யாவின் தோலில் தான் அதிகசத்துக்கள் உள்ளன. இதனால் தோலுடன் சாப்பிட வேண்டும்.


முகத்திற்கு பொலிவையும், அழகையும் தருகிறது. தோல் வறட்சியை நீக்குகிறது. முதுமை தோற்றத்தை குறைத்து இளமையானவராக மாற்றுகிறது. மதுபோதைக்கு அடிமையான மது பிரியர்கள் அப்பழக்கத்தில் இருந்து விடுபட நினைத்தால் இப்பழத்தை அதிகம் சாப்பிடலாம். இதை தொடர்ந்து சாப்பிட்டால் மது அருந்தும் ஆசை, வெறி எல்லாம் தூள் தூளாகி விடும். மிக எளிதில் மது போதை பழக்கத்தில் இருந்து விடுதலை பெறலாம். உணவு சாப்பிடுவதற்கு முன் இப்பழத்தை சாப்பிடுவது நல்லதல்ல.


சாப்பிட்ட பின்போ அல்லது சாப்பிடுவதற்கு நீண்ட நேரத்திற்கு முன்போ சாப்பிட்டால் நல்லது. நோயால் அவதியுற்று மருந்து சாப்பிட்டு வருபவர்கள் இப்பழத்தை சாப்பிட்டால் மருந்து முறிவு ஏற்படும். இருமல், தோல் தொடர்பான வியாதி உள்ளவர்கள் இப்பழத்தை சாப்பிட்டால் நோய் அதிகமாகும். ஒரு சிலருக்கு மயக்கம் ஏற்படும். வாதநோய், ஆஸ்துமா போன்ற நோய் உள்ளவர்கள் இப்பழத்தை சாப்பிடவே கூடாது. மற்றவர்கள் கொய்யாப்பழத்தை இரவில் சாப்பிடாமல் இருப்பது சிறந்தது. இரவில் சாப்பிட்டால் வயிறு வலி உண்டாகும். கொய்யாவை அளவுடன் சாப்பிடவேண்டும். அளவிற்கதிகமாக சாப்பிட்டால் பித்தம் அதிகரித்து வாந்தி மயக்கம் ஏற்படும்.

◆

அறிமுகம்

# சீவகசிந்தாமணி




புலவர். கு. ஏழுமலை

ஐம்பெரும் காப்பியங்களுள் சீவகசிந்தாமணி முதன்மையாக வைத்து எண்ணப்படுகிறது. அந் நூலின் ஆசிரியர் வரலாற்றையும், அந்நூலின் கதைச்சுருக்கத்தையும் ஈண்டு காண்போம்.

சீவகசிந்தாமணி என்னும் இந்த ஒப்பற்ற வனப்பு நூலைச் செய்தருளியவர் திருத்தக்கதேவர் என்பவர் திருத்தகு முனிவர், திருத்தகு மகாமுனிவர் என்னும் பெயர்களாலும் வழங்கப்படுவர். நமது செந்தமிழ்ப் புலவர்களிலே தேவர் என்னும் பெயர் மூன்று புலவர்களைக் குறிக்கும். அவர் திருவள்ளுவனார், திருத்தக்கதேவர், தோலா மொழி ஆகிய மூவருமாம். ஆயினும் தேவர் என்னும் இந்தப் பெயர் திருத்தக்க தேவர்க்கே சிறந்துரிமையுடையதாகும்.

திருத்தக்கதேவர் சோழர் குலத் தோன்றல் என்று கூறப்படுகின்றார். இவர் காலம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டிற்கும் ஏழாம் நூற்றாண்டிற்கும் இடைநிகழ்ந்த காலத்தில் ஒரு பகுதியாக இருக்கக் கூடும் என்று தெரிகிறது. இவர் அந்தக் காலத்திலே தமிழகத்திலே பெரிதும் செல்வாக்குற்றிருந்த ஆருகத சமயத்தைச் சார்ந்தவராவார். மேலும் இளமையிலேயே இவர் துறவியாகியிருந்தவர். பல கலையும் கற்றுத் தேர்ந்து அறிவுக்கடலாகத் திகழ்ந்தவர்.

திருத்தக்கதேவர் சான்றோரிணக்கம் கருதி மதுரை மூதுரை அடைந்து ஆங்குச் சங்கப்புலவர் களோடு கூடி அளவளாவியிருந்தனர் என்றும், அப்பொழுது ஆங்கிருந்து தமிழ்ப்புலவருட் சிலர் ஆருகத சமயத்தவர் துறவு முதலியவற்றைப் பாடுவரேயன்றிக் காமச்சுவை கெழுமிய காப்பியம் பாடவறியார் என்று கூறினர் என்றும், அதுகேட்ட தேவர் தாம் அக் குறையை அகற்றக் கருதிக் காமச் சுவை மிக்க இச்சீவகசிந்தாமணியை இயற்றிப் பெரும்புகழ் எய்தினர் என்றும் ஒரு வரலாறு கேட்கப்படுகிறது.

இன்னும் காப்பியம் செய்யக் கருதிய தேவர் தங்கருத்தினை தம் ஆசிரியர்க்குக் கூறியபொழுது அந்த ஆசிரியர் தேவருடைய புலமையாற்றலை அளத்தற் பொருட்டு அப்பொழுது ஆங்கே ஓடிய ஒரு நரியைச் சுட்டிக்காட்டி "நீர் காவியம்

பாடுமுன்னர் இந்த நரியைப் பொருளாக வைத்து ஒரு சிறு நூல் இயற்றிக் காட்டுக" என்று பணித்தனர் என்றும், தேவரும் அப்பொழுதே ஆசுகவியாக விரைந்தொரு சிறுநூல் பாடி அதற்கு நரி விருத்தம் என்று பெயரிட்டு ஆசிரியர்க்குக் காட்டினர் என்றும், அந்நூலின் அருமையுணர்ந்த ஆசிரியர் இனி நீயிர் நினைத்தபடியே பெருங்காப்பியஞ் செய்க? என்று பணித்தனர் என்றும், அப்பணி தலை மேற்கொண்டு தேவர் அப் பெருங்காப்பியத்திற்குக் கடவுள் வாழ்த்துப் பாடி வழங்கும்படி ஆசிரியரை வேண்ட அவரும் 'செம்பொன் வரைமேற் பசும்பொன்' என்று தொடங்கும் பாட்டைப் பாடிக் கொடுத்தனர் என்றும்; பின்னர், தேவர் "மூவா முதலா உலகம்" என்னும் கடவுள் வாழ்த்தைப் பாடிக் காப்பியங் தொடங்கினராக இந்தச் செய்யும் தம்முடைய செய்யுளினுங் காட்டிற் சிறந்திருத்தல் கண்ட ஆசிரியர். இதனையே முதற்செய்யுளாக அமைத்துக்கொள்ளும்படி பணித்தனர் என்றும் ஆசிரியர் பணியாகவின் அதனை மறுக்கமாட்டாராய் அங்ஙனமே தம் செய்யுளையே முதலாக வைத்துப் பாடினர் என்றுங் கூறுவர்.

இன்னும் இளமையிலேயே துறவியாகிய இவர் காமச்சுவை ததும்ப இவ்வாறு எங்ஙனம் பாடவியலும் என்று சிலர் ஐயுற்ற பொழுது தேவர் தீயிற் பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்பின் துண்டினைக் கையிலேந்தித் தம்முடைய நல்லொழுக்கத்தைப் பலரும் அறியச் செய்தனர், என்றும் கூறுவர். இவையெல்லாம் தேவரைப்பற்றிக் கன்னப்பரம் பரை யாக வழங்கிவருஞ் செய்திகளேயாம் இவற்றிற்குச் சான்றுகள் இல்லை.

திருத்தக்க தேவருடைய ஒப்பற்ற நல்லிசைப் புலமையை என்றென்றும் உலகத்தார்க்கு நன்கு விளக்கிக்கொண்டு நின்று நிலவும் நற்சான்று அப்பெரியார் இயற்றிய சீவகசிந்தாமணி என்னும் இந்த வனப்பு நூலேயாகும். இவர் இயற்றிய இந்த நூலைக் கல்லாதார், ஒரு தலையாகக் கல்லாதவரேயாவர். சிந்தாமணியின் தீஞ்சுவை தேறாதார் செந்தமிழின் தீஞ்சுவை தெரியாப் பதடிகளே.

திருத்தக்கதேவர் பொதுவாகத் தமக்கு முந்திய செந்தமிழிலக்கியங்களிலே கண்ட அறிவுச் செல்வம் பலவற்றையும் திரட்டித் தமது சிந்தாமணியிலே பொதிந்து வைத்துள்ளார். சிறப்பாக இவர் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கினும் ஆசிரியர் திருவள்ளுவனாரயே பின்பற்றித் தமது காப்பியத்தைப் படைத்தருளியிருக்கின்றார். இவருடைய செய்யுள் சில திருக்குறட் செய்யுள் சிலவற்றிற்கு அரிய விளக்கமாகவே அமைந்திருக்கின்றன. இறைவனைப் போன்று என்றென்றும் கட்டிளமை திகழும் கன்னிமையோடு நின்று நிலவும் நம் தமிழ்த் தெய்வத்திற்கு இவர் இயற்றியளித்த சிந்தாமணி அழகின்மேல் அழகு செய்யும் ஓர் அருங்கலம் ஆகும் என்பதில் ஐயமில்லை.

**கதைச்சுருக்கம்**

இந்நாவலந்தன் பொழிவின் ஏமாங்காதம் ஏமாங்கதம் என்று தன்னிசையால் திசைபோய நாடோன்று உளது. நீர்வளமும் நிலவளமும் பிற வளங்களும் நிரம்பிய இவ்வேமாங்கத நன்னாட்டை இராசமாபுரம் என்னும் சிறந்த நகரத்தின் கண்ணிருந்து சச்சந்தன் என்பான் செங்கோலோச்சினன். இம்மன்னர் மன்னன் கட்டிளமையும், பேரழகும், பேராற்றலும், நுண்ணறிவும், வன்மையும், பிறவும் ஒருங்கேயுடையனாய் விளங்கினான். இவன் அருட்குடைத் தண்ணிழலில் வையகம் மகிழ்ந்து வைகியது.

இம்மன்னன் தன் மாமனாகிய விதைய நாட்டரசன் மகள் விசயை என்பவளை இனிதின் மணந்தான். விசயை ஒப்பற்ற பேரழகுடையவள். நற்குணங்கட்கு உறையுள் போன்றவள். கலங்காக கற்புடைய காரிகை. சச்சந்தன் இவள் பெண்மை நலத்திற் பெரிதும் ஈடுபாடுடையனாய் அவளை இமைப்பொழுதும் பிரியவியலாதவனாயினன். அவளோடு உடனுறைதற்குத் தன் அரசியற் கடமைகள் இடையூறாதல் கண்டு தன் அமைச்சருள் ஒருவனாகிய கட்டியங்காரனை அழைத்து அரசாட்சியை அவன் பால் ஒப்புவித்துத் தான் உவளகத்தே விசயையோடு நொடிப் பொழுதும் பிரிவிலனாய் உறைந்தின் புற்றனன்.

இஃதிங்ஙனமாக, ஒருசில திங்களிலேயே விசயைக் கருவுற்றனள். ஒருநாள் விசயை மூன்று கனாக்கண்டு அவற்றை சச்சந்தனுக்குணர்த்தி அவற்றின் பயன்களைத் தனக்குணர்த்தும்படி வேண்டினாள் அக்கனவுகளுள் ஒன்று தனக்கு வரும் கேட்டினைக் குறிப்பதுணர்ந்த சச்சந்தன். தன்

உள்ளுணர்வின் தூண்டுதலாலே ஒரு தச்சனை யழைத்து வான்வழிப் பறந்து செல்லுமொரு மயிற் பொறி செய்வித்தனன். அம் மயிற் பொறியினை வானத்தே செலுத்தவும் கீழிறக்கவும் விசயைக்குக் கற்பித்தனன்.

பெறலருந்திருப் பெற்றபின் யாவர்க்குஞ் சிந்தனை பிறிதாதல் இயல்பன்றோ? அரசாட்சிப் பொறுப்பனைத்தும் தன்பால் எய்தியிருக்கும் இச்செவ்வி இதனைத் தம்முடையதாகவே ஆக்கிகொள்ளத் தகுந்ததொரு செவ்வியாகும் என்று கருதிய கட்டியங்காரன் அமைச்சரோடு ஆராய்ந்த னன். அவருட் சிலர் இக் கருத்தினை எதிர்த்துக் கட்டியங்காரனைத் திருத்த முயன்றனர்: கட்டிங் காரன் அவர் நல்லுரை கேளானாய்த் தான் கருதி யிதே முடிப்பத் துணிந்து ஆவன செய்து அரசனை அந்தப்புரத்தில் வைத்தே நால்வகைப் படைகளுடன் முற்றுகையிட்டனன்.

இத்தீயச்செயல் உணர்ந்த சச்சந்த மன்னன் சீறினன்; என் செய்வான்! மகவின் நலங்கருதி விசயையை மயிற்பொறியிலேற்றி வானத்தின் வழியே புறம்போக்கினான். தான் ஒருவனே போர்க்கோலம் பூண்டு ஒப்பற்ற தன் தறுகண்மையாவே அப்பெரும் படைகளை ஒருங்கே எதிர்த்து நீண்டபொழுது போர்செய்து இறுதியில் கட்டியங்காரனாற் கொல்லப்பட்டனன்.

வெற்றி முரசொலி நங்கை விசயையின் செவியை எட்டியது. சச்சந்தன் முடிந்தமை உணர்ந்தாள்; மயங்கினள்; மயிற் பொறியைச் செலுத்த மறந்தாள்; திகைத்தாள்; மெய்ம்மறந்தாள். பாவம்? பிறிதென் செய்வாள் பேதை?

முறுக்குடைந்த மயிற்பொறி மெல்ல மெல்ல வீழ்ந்து அந்நகரத்துப் புறக்காட்டிலிறங்கிக் கால் குவிந்திருந்தது. அப்பொழுசூத விசையை அவ்விடத் திலேயே கருவுயிர்த்தாள்; குண கடலில் தோன்றும் இளஞாயிறு போன்றதோர் ஆண்மகவு அவள் வயிற்றினின்றும் தோன்றியது. ஒருவாறு மயக்கந் தீர்ந்த விசையை, அவ்வருமந்த மகவின் நிலைமை யையும், மன்னனுக்குற்ற கேட்டினையும், கருதிப் பெரிதும் வருந்தினள். ‘திக்குற்றவர்க்குத் தெய்வமே துணை’ என்பதற்கிணங்க அம் மயானத்துறையும் தெய்வமொன்று விசயையின் தோழி சண்பகமாலை என்பாளின் வடிவங்கொண்டு அவள்முன் வந்து தோன்றித் துணைசெய்வதாயிற்று. “கோப்பெருந் தேவி! இப்பொழுது இக்குழவியை எடுத்துப்போய்ப் புரப்பான் ஒருவன் ஈண்டு வருவன். ஆதலால் இதனை இங்குக் கிடத்தியாம் சிறிது பொழுது மறைந்திருத்தல் வேண்டும்’’ என்று விசயைக் குணர்த்த இருவரும் அயலிலே சென்று மறைந்திருந் தனர்.

அப்பொழுது அந்நகரத்துள்ள கந்துக்கடன் என்னும் வணிகன் ஒருவன் இறந்துபட்ட தன் மகவைப் புதைத்தற்கு அங்கு வந்தனன். விசயை மகவினைக் கண்டு வியந்தான்; தன் மகவைப் புதைத்துவிட்டு இம் மகவினை ஆர்வத்துடன் எடுத்துப்போய்த் தன் மனைவி சுநந்தைக்குக் காட்டி இறந்ததாகக் கருதிய நம்மகவே உயிர்பெற்றதெனக் கூறிக் கொடுத்தான். அவளும் அதனை ஏற்று உவகையுடன் வளர்த்தனள். கந்துக் கடன் மயானத்தே இக்குழவியை எடுத்தபொழுது அது தும்மிற்றாக ஆண்டு மறைந்திருந்த தெய்வம் ‘சீவ’ என்று வாழ்த்தியது; அது அவன் காதிற் பட்டபடி யால் அக்குழந்தைக்கு சீவகன் என்று பெயரிட்ட னன். சுநந்தை பின்னர் நந்தட்டன் என்னும் ஒரு மகவினை ஈன்றாள்.

இனி, விசயையை முன்கூறப்பட்ட தெய்வம் அழைத்துப்போய்த் தண்டகாரணியத்தே சென்று ஆண்டுறையும் துறவோருடன் கூட்டிய பின்னர் மறைந்தது. விசயை அவணிருந்து தன் மகவின் நலங்கருதி நோன்பு செய்திருந்தனள்.

கந்துக்கடன் சீவகன் நந்தட்டன் முதலியோரை நல்லாசிரியரிடத்துக் கலைகள் பலவும் பயிற்றுவித் தான். அச்சணந்தி என்னும் அப்பேராசிரியர் சீவகனு டைய நுண்மானுழை புலனை உணர்ந்து மகிழ்ந்த னர். சீவகனைத் தனியிடத்தே அழைத்துச் சென்று ஒரு கதை கூறுவார்போன்று அவனது வரலாற்றை உணர்த்தினர். பின்னரும், ஓராண்டு முடியமளவும் நீ நின்னை வெளிப்படுத்தாதே இருத்தல் வேண்டும்“, என்றும் வற்புறுத்தி வரங்கொண்டனர்.

அச்சணந்தியாசிரியர் தம் வரலாற்றையும் சீவகனுக் குணர்த்தி அவன்பால் விடைப்பெற்றுப் போய்த் தவம் செய்து வீடுபெற்றுயர்ந்தனர். இராசமாபுரத்தில் சீவகன், நந்தட்டன் முதலியவ ரோடு வைகுவானாயினன்.

***சீவகசிந்தாமணி நூலுக்குப் பெருமை சேர்க்கும் உவமைகள்:***

*மழைத்தாரை: வெள்ளிவெண் கோனிரைத்தன போற் கொழுந்தாரைகள்,*

*மாந்தர்: தேர்ந்த நூற் கல்விசேர் மாந்தர்.*

*துகில்: ஆவியன்ன பூந்துகில், நுரைகிழித்த னையை நொய்மை நுண்டுகில் பாலாராவில் பைந்துகில்.*

*பீடு : பெண்வலைப் படாதவர் பீடின் ஒழுகிய அண்ணல்.*

*மழலை: மெய்பெறா எழுத்துயிர்க்கும் மழலை.*

*சொல்வன்மை: நாவினுள் உலகம் நடக்கும்.*

*சிறிது : "ஆலம் வித்தனயை".*

*வாய்மை: "தப்பில் வாய்மை".*

*நுண்பொருள்: "நூற்படு புலவன் சொன்ன நுண்பொருள்."*

*உவமை : ஒளிநல உப்புக் குன்றம் ஊர்ப்புனல் குடைந்தால் போல, "ஆடியுள் பாவைபோல் சீருறு சிலம்பி நூலாற் சிமிழ்ப்புண்ட சிங்கம்," என்றின் னோரன்ன தீஞ்சொற்றொடர்கள்.*

***சிந்தாமணியின் பெருமை:***

*1. 'திருத்தக்கதேவர் தமிழ்க் கவிஞருள் சிற்றரசர்" வீரமாமுனிவர்*

*2. "சீவகசிந்தாமணி இப்பொழுதுள்ள தலை சிறந்த தமிழிலக்கியச் சின்னமாகும்," தமிழ்ப்பெருங் காதற் காப்பியம்," உலகம் பெருங் காப்பியங்களில் ஒன்று."*

*3. சிந்தாமணி எல்லாத் தமிழ் இலக்கியங் களுள்ளும் பழமையானது, சமணத்தை விளக்குவ தற்காக இயற்றப்பட்டது. அஃது இலக்கியச் சிறப்பு மிக்கது: இச்சிறப்பின்றேல் பண்டே மறைந்து போயிருக்கும். அதன் ஆசிரியர் நடை ஒருதனி நடையாகும், அஃது ஓர் உயரிய இலக்கிய நூலாக அமைந்துள்ளது.*

**சூலியேன் வேன்சோன்**

*பிரஞ்சுப் பன்மொழியாராய்ச்சியாளர்.*

◆

# உங்களுக்குத் தெரியுமா?

**துணுக்கு 1:-**

கலைக்கூடமொன்றில் தன் ஓவியங்களைக் காட்சிக்கு வைத்திருந்தாள் ஓவியர் ஒருவர்.

அந்தக் கலைக்கூடத்தின் உரிமையாளரிடம்,

'இன்று யாராவது என் ஓவியங்களை வாங்குவதில் ஆர்வம் செலுத்தினார்களா?' என்று கேட்டார் ஓவியர்.

. 'உங்களிடம் தெரிவிப்பதற்கு நல்ல சேதி ஒன்றும், கெட்ட சேதி ஒன்றும் உள்ளது.'

அப்படியா? முதலில் நல்ல சேதியைச் சொல்லுங்கள்'

'உங்களது ஓவியங்களைப் பார்வையிட்ட ஒருவர், நீங்கள் இறந்த பிறகு இந்த ஓவியங்களுக்கு மதிப்பு கூடுமா எனக் கேட்டார். ஆம். கூடும் என்று நான் சொன்னவுடன், 15 ஓவியங்களையும் அவரே வாங்கி விட்டார்.'

'அப்படியா? மிகவும் நல்லது. சரி. அந்த கெட்ட சேதி?'

'அந்த ஆள் வேறு யாருமில்லை. உங்கள் குடும்ப டாக்டர் தாம்.'

**துணுக்கு 2 :-**

குருவைச் சந்தித்து ஞானோதயம் பெறுவது எப்படி என்ற தம் சந்தேகத்தைக் கேட்டார் அறிஞர் ஒருவர்.

'மழை பெய்யும் போது இரு கைகளையும் உயரத் தூக்கியவாறு நில்லுங்கள்; ஞானோதயம் கிடைக்கும்,' என்றார் குரு.

'குருஜி! நீங்கள் சொன்னவாறே நேற்று மழையில் நின்றேன். தண்ணீர் என் கழுத்து வழியாக கீழே இறங்கி ஓடிய போது, நான் ஒரு முட்டாளைப் போல உணர்ந்தேன்' என்றார் அந்த நபர்.

'முதல் நாள் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய ஞானோதயம் அது தான்,' என்றார் குரு.

**துணுக்கு 3:-.**

அழகான இளம்பெண் ஒருத்திக்குத் தினந்தினம் போன் செய்து கொண்டிருந்த வாலிபன் ஒருவன் ஒரு நாள் அவளிடம்,

'அன்பே!, உனக்காக எதை வேண்டுமானாலும், நான் விடத் தயாராயிருக்கிறேன்' என்றான்.

'அப்படியா? உன் நம்பிக்கையை விட்டு விடு' என்றாள் அவள்.

# முகநூல் செய்திப் பரிமாற்றம்



தமிழக உறவுகளே இந்தக் கண்ணீர் கதையை ஒரு கணம் கேளுங்கள்:

தொடர்ச்சியாக திருச்சி ஈழத் தமிழ் அகதிகளின் சிறப்பு முகாம் பற்றிய தகவல்களை அங்கிருந்து துடித்துக் கொண்டு இருக்கும் எம் உறவுகளின் கண்ணீர் கதைகள் அடிப்படையில் தொடர்ச்சியாக தந்து கொண்டு இருக்கின்றேன். அவர்களின் இன்றைய பகிர்வு இது:

அன்பு உறவுகளே இதோ இந்தச் செய்தியையும் படியுங்கள்:

அங்கு ஆண்டுக் கணக்காக தடுத்து தனிமைப் படுத்தப்பட்ட ஒரு சகோதரனின். கண்ணீர் வரிகள் இவை

"இந்த வதை முகாமில் நாள் ஒன்றுக்கு 70/= பணம் கொடுக்கிறார்கள் அக்கா. குடிப்பதற்கு தண்ணீர் வாங்குவதற்கு அதாவது ஒரு தண்ணீர் கேன் விலை 30/= இந்த நிலையில் ஒருவேளைதான் உணவு சாப்பிடுகின்றோம். இரு வேளை பட்டினியில் போகிறது. பசியில் அணு அணுவாக செத்துக் கொண்டு இருக்கிறோம்.

சிறைக் கைதிகளை விட கொடிய நிலை எமக்கு. அப்படி நாம் செய்த தவறு என்ன? அகதியாக இந்த மண்ணுக்கு வந்தது தவறா? நாம் செய்த பாவம் என்ன? எதற்கு எம்மை இப்படி வதைக்கின்றார்கள்? கேட்பார் யாரும் இல்லையா?

ஒரு வேளை உணவைக் கூட நாம் பசியாற உண்டதில்லை கேட்டால் சிறப்பு முகாம் என்று பெயர். ஆனால் மத்திய சிறையில் மூன்று வேளை சாப்பிட முடிகிறது. அப்படி என்றால் நாம் சிறைக் கைதிகளை விட கொடூரமாக தண்டிக்கப்பட வேண்டியவர்களா?

பசி தாங்கவில்லை அக்கா. தமிழக அரசை வலியுறுத்துங்கள். எம்மை விடுதலை செய்யச் சொல்லுங்கள்.

பசி தாங்கவில்லை பணத்தை கொஞ்சம் கூட்டித் தாருங்கள் என கேட்டால் முடியாது அரசு இதைத் தான் உங்களுக்கு ஒதுக்குகிறது என்று கூறுகிறார்கள்.

இந்தக் கொடுமையை கேட்க யாருமே இல்லையா?

சும்மா இருந்து சாப்பிட எமக்கு என்ன ஆசையா? எம்மை வெளியே விடுங்கள் வேலைக்கு போய் எம் குடும்பத்தோடு இருந்து அவர்களுக்கும் உழைத்துக் கொடுத்து, நாம் எம் வாழ்வை பார்த்துக் கொள்கின்றோம்.

இப்படி அணு அணுவாக சித்திரவதை செய்வதை விட ஒரேயடியாக எம்மைக் கொன்று போடுங்கள் இல்லையேல் எம்மையேனும் சாக விடுங்கள்"

தமிழனுக்குத் தமிழின் பெருமையை ஆங்கிலத்தில் சொன்னால்தான் புரியும் போலிருக் கிறது. வெளியாகி 4 ஆண்டுகளுக்குப் பிறகு, தற்போது ஆங்கில மொழிபெயர்ப்பு வந்த பிறகுதான் கொங்கு மண்டலத்தில் உள்ள சிலருக்கு பெருமாள் முருகன் எழுதிய "மாதொருபாகன்" நாவல் புரிகிறது. கோபம் வருகிறது. திருச்செங்கோட்டில் கடைய டைப்பு. ஆர்.டி.ஓ.வுடன் பேச்சுவார்த்தை. காவல் துறையின் வேண்டுகோளுக்கு இணங்கி பாதுகாப்புக் கருதி, எழுத்தாளர் தன் குடும்பத் துடன் சற்று வெளியே இருத்தல் போன்ற எல்லாமும் நடக்கின்றன.

கொங்கு மண்டலத்தின் பெருமைகளை கலாச்சார விழுமியங்களை பழக்கவழக்கங் களைப் பதிவு செய்த பாராட்டுக்குரிய எழுத்தாளர் பெருமாள் முருகன் மனம் நொந்து, தனது பேனாவை இனி திறப்பதில்லை என்று மூடி வைத்து விட்டார். தன்னுள் இருக்கும் இலக்கியவாதிக்கு மரண சாசனம் எழுதவும் முற்பட்டிருக்கிறார் பிள்ளைச் செல்வம் இல்லாத பெண்கள் தெய்வத்தை வேண்டி யார் எனத் தெரியாமல் "கண்மூடி" ஏற்றுக் கருவுறுகிற, சாமி தந்த பிள்ளையாக அக்குழந்தை யைப் பார்க்கிற, ஒரு பழைய நடை முறையை அந்த நாவலில் பெருமாள் முருகன் பதிவு செய்திருக் கிறார் என்பதுதான்எதிர்ப்புக்குக் காரணம். அவர் எழுதியது பொய் அல்ல.

# தமிழனுக்கு தமிழின் பெருமையை ஆங்கிலத்தில் சொன்னால்தான் புரியும் போலிருக்கு!






சமூகத்தில் இருந்த பழக்கம் தான், கோயிலில் இரவு தங்கி இருத்தல், குறிப்பிட்ட நாளில் இரவு முழுவதும் கோயில் வளாகத்தில் கண்விழித்து மண்சோறு சாப்பிடு தல், தீர்த்தமாடுதல், இவை யாவும், "இத்தனை நாள் இல்லாமல் எப்படி இப்போது? என்கிற கேள்விக்கு முற்றுப்புள்ளி வைப்பதற் காக சமூகம் தந்த அங்கீகாரச் சடங்குகள் என்பதை நாம் மறுத்துவிடலாகாது.

மலையாளத்தில் எம்.டி. வாசு தேவன் நாயர், "இரண்டாம் இடம்' என்கிற நாவலை எழுதியிருக் கிறார். அதனை சாகித்ய அகாதெமி தமிழி லும் வெளியிட்டுள்ளது. பீமன் எப்போதும் தான் இரண்டாம் இடத்தில் வைக்கப்படுவதற்காக ஆதங்கப்படுவதுதான் கதை "நான் அறியாப் பருவத்தில் தேரோட் டியுடன் கலந்து பெற்ற மகன்தான் கர்ணன். பாண்டுவை மணந்த பிறகு, பாண்டு மகாராஜா கலவிக்கும்

தகுதியில்லாமல் இருதயமும் பலவீனமாக இருந்ததால், விதுரருக்கு பெற்ற மகன்தான் தருமன், மிகக் திடகாத்திரமான காட்டு வாசிக்குப் பிறந்தவன் தான் நீ-என்று குந்தி சொல்வதாகக் கதை செல்கிறது. இந்த நாவலை மலையாள உலகம் எதிர்க்கவில்லை பல பதிப்புகள் கண்ட நாவல் இது. இலக்கியத்தை இலக்கியமாகப் பார்க்கத் தெரிந்த சமுதாயம் அது, படைப்பிலக்கியவாதியின் கற்பனைக்குக் கடிவாளம் போடாத நாகரிக சமுதாயம் அது.

இலக்கியத்தை கோயில் வழிபாட்டுச் சடங்கு களை எல்லாம் விட்டுவிடுவோம். இன்று ஃபெர்டி லிடி சென்டர் எனப்படும் கருக்கூட்டு மருத்துவ மனை யில் என்ன நடக்கிறது? ஓர் ஆண் மலடு, பெண்ணோ கருவுறத் தகுதி படைத்தவள். அவர்கள் பெர்டிலிடி மருத்துவமனைக்குச் செல்லும்போது, “உங்கள் குடும்ப மரபினி தொடர விரும்பினால். உங்கள் சகோதரர் யாரிடமாவது விந்து தானம் பெற்று உங்கள் மனைவியை கருவுறச் செய்யலாம். இல்லையென்றால் விந்து வங்கியில் பெற்று கருவுறச் செய்யலாம். உங்களுக்குச் சம்மதமா என்பதுதான் நேர்மையான நல்லிதயம் படைத்த மருத்துவரின் முதல் கேள்வி. பல லட்சம் ரூபாய் செலவு செய்ய வசதி இல்லாத ஒரு தம்பதி, தங்களுக்கு பிள்ளை வரம் வேண்டும் என்பதற்காக சமூகம் அங்கீகரித்த கோயில்கள் உருவாக்கித் தந்த யார் யாருடன் என்றறியாத கண்மறைப்பு நடைமுறைகள் இன்று வழக்கத்தில் இல்லாததால், ஒரு பெண் தனக்கான விந்து தானத்தை, தானே தன் விருப்பப்படி, மகாபாரதக் குந்தியைப் போலத் தேர்வு செய்து கொள்கிறாளே.

அதைத் தவிர்க்க முடியுமா? மறுக்க முடியுமா? அல்லது தடுக்கத்தான் முடியுமா? சங்க காலத் தமிழனின் காதல் வாழ்க்கையைப் பதிவு செய்தது தானே அகநானூறு. தான் வாழ்ந்த காலத்தில் அதற்கு முற்பட்ட காலத்தில் இருந்த நடைமுறையை, தான் எழுதும் கதையில் பதிவு செய்வது என்பது படைப்பிலக்கியவாதியான பெருமாள் முருகனின் உரிமை. கடமை இல்லாததையே கூட எழுதி யிருந்தாலும், அது அவரது கற்பனைக்குத் தரப்பட வேண்டிய சுதந்திரம். அதைத் தடுக்க முற்படுவது எப்படிச் சரியாகும்? எதைச் சொன் னாலும் அது யாராவது ஒருவர் மனதைப் புண்படுத்துகிறது என்கிற பெயரில் போராட்டம் நடத்துவது தற்போது வழக்கமாகி விட்டது. ஒரு கருத்து ஏற்புடையதல்ல என்றால் அதற்கு மாற்றுக் கருத்தை முன்வைக்கலாம். மாறாக யாரும் கருத்தே கூறக்கூடாது என்றால், எப்படி சரி? பெருமாள் முருகனுக்குப் பக்கபலமாக நின்றிருக்க வேண்டிய அரசு நிர்வாகம் போராட்டக் காரர் களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்ததே கூட மிகப்பெரிய தவறு. சமீபத்தில் ஒரு திரைப்படத்திற் குத் தடை விதிக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றத் தில் வழக்கு வந்தபோது, நீதிபதி வெ.ராமசுப்பிர மணியன் தெளிவாக வழங்கிய தீர்ப்பு. “தணிக்கைக் குழுவால் சான்றிதழ் வழங்கப்பட்ட திரைப்படத்தை வெளியிடாமல் தடுக்கும் உரிமை யாருக்கும் கிடை யாது. அந்தத் திரைப்படம் வெளிவருவதை உறுதிப் படுத்த வேண்டிய கடமை அரசுக்கு உண்டு என்பது. அதுவே பெருமாள் முருகனின் மாதொரு பாகன் பிரச்சனைக்கும் பொருந்தும். சாதியும், சமயமும், கணவனும் ஏற்றுக்கொண்டாலும் ஆணாதிக்க மானுடம் ஏற்க மறுக்கிறது

இது சார்லி ஹெப்டோ பத்திரிகை அலுவல கத்தில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலின் மற்றொரு பாகம். இதுவே வெளிமாநிலத்திலோ வெளிநாட்டிலோ நடந்திருந்தால் கருத்துச் சுதந்திரத்திற்கு ஆதரவாக உலகமே திரண்டெ ழுந்திருக்கும் தமிழனாய் பிறந்தது பெருமாள் முருகனின் தவறு!


*நன்றி:* **தினமணி (ஜன.15) தலையங்கம்.**

---

திரைப்பட இசைக்கலைஞர்கள் சங்கத்தின் அறிக்கை ஒன்றை நாம் பார்த்தபோது அதில், தமிழ் அதிகபட்ச தவறுகளுடன் காணப்பட்டது. அதைக் குறிப்பிட்டு நமது இதழில் எழுதியிருந்தோம்.

அவர்களுக்கும் அனுப்பி யிருந்தோம். நமது செய்தியை அவர்கள் தவறாக எடுத்தக் கொள்ளாமல், அதை ஆலோசனையாக ஏற்றுக் கொண்டு சங்கத்தின் தலைவர் எஸ்.ஏ.இராஜ் குமார் அவர்களும் செயலர் டோம்னிக் சேவியர் அவர் களும். தற்போது திரைப்பட இசைக்கலைஞர்கள் சங்கத் தின் பொதுக்குழுவுக்கான அறிவிப்பு வெளிவந்த அந்தத் தாளில் ஓரிரண்டு தவறுகளைத் தவிர நல்ல தமிழ் தவறின்றி கையாண்டி ருக்கின்றனர். அவர்களுக்கு முற்றம் இதழ் சார்பாக வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள் கிறோம்.

**வழக்கறிஞர் இமயவரம்பன்** துணை ஆசிரியர்.




தமிழீழப் பாவேந்தர் காசிஆனந்தன்

3

# சிங்கள மண்ணின் இனவெறித் தலைவர்கள்

'பறைத் தமிழர்களைக் கடலில் தள்ள வேண்டும்' என்று சிங்கள இனவெறித் தலைவர்களில் ஒருவரான பிலிப் குணவர்த்தனா பேசிய பேச்சு அந்த நாட்களில் தமிழீழ மேடைகளில் பரவலாக அலசப்பட்டது.

1958 இனக்கலவரத்தின் போது அரசாங்க அதிபர் ஒருவர் இலங்கைத் தலைமை அமைச்சராக இருந்த பண்டார நாயக்காவிடம் நான் இந்தக் கலவரத்தைக் கட்டுப்படுத்துகிறேன் என்று சொன்ன நேரத்தில் வேண்டாம் அதன் சுவையை அவர்கள் பட்டுணரட்டும் விட்டுவிடு என்று சிங்கள இன வெறியர் பண்டாரநாயக்கா கொக்கரித்தார்.

'நான் யாழ்ப்பாண மக்களின் கருத்துக்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. இப்போது அவர் களைப் பற்றிச் சிந்திக்க முடியாது. அவர்களின் உயிர்களைப் பற்றியோ அவர்கள் எம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றியோ சிந்திக்க முடியாது'

என்று இலங்கையின் குடிஅரசுத் தலைவராக இருந்த இனவெறியர் ஜே.ஆர்.செயவர்த்தனா 11 சூலை 1983இல் வெளிவந்த 'டெய்லி டெலிபிராப்' இதழில் கூறி இருந்தார்.

ஜே.ஆர்.செயவர்த்தனாவின் அமைச்சரவையில் தேசியப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த அத்துலக் முதலி என்ற சிங்கள இனவெறித் தலைவரிடம் அவரது ஆக்ஸ்வேர்ட் பல்கலைக் கழக நண்பரான கலாநிதி டேவிட் செல்போர்ன் என்பவர் 'இனப் பிரச்சனைக்கு எத்தகைய தீர்வைக் காணப் போகிறீர்கள்? என்று கேட்டபோது தமிழர்களின் தலைகளை நொறுக்குவதுதான் தீர்வு என்று பதிலளித்தார் அத்துலக்முதலி.

‘இலங்கையில் தமிழர்கள் தமிழீழம் அமைக்க முயல்வதைக் கண்டு சிங்கள மக்கள் விழித்தெழுந் தால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இராது. உறங்கிக் கொண்டிருக்கும் சிங்களவரைக் குழப் பாதீர்கள் என்று தமிழர்களுக்குச் சொல்லிக் கொள் கிறேன்.

சிங்கங்களைச் சீண்டினால் அது அமைதியாக இராது என்பது எல்லோருக்கும் தெரியும்’ என்று 1981 சூலையில் இலங்கை நாடாளுமன்றத்தில் உரை ஆற்றிய டபிள்பு ஜே.எம்.லொக்கு பண்டார என்னும் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர் உறுமினார்.

இவர்களையெல்லாம் விட மேத்தானந்தா ராஜரத்னா போன்ற சிங்களத் தலைவர்கள் இன்னும் கூடுதலாகவே இனவெறி நெருப்பை மூட்டி னார்கள்.

**சிங்கள இனவெறி நாய்கள்**

கொல்லுவதும் உடல்களைக் குண்டுகளால் கிழித்துப் புதைகுழியில் தள்ளுவதும் குருதியில் நீச்சலடித்துத் துள்ளுவதும் சிங்களவர் கொள்கை யாக இருக்கிறது.

கடுகளவும் மாந்தநேயம் இல்லாச் சிங்கள இனவெறி நாய்கள் தமிழர்களைக் கடித்துக் குதறுகின்றன.

பொறுமையின் எல்லை தாண்டித் தந்தை செல்வா அறவழியிலும் தலைவர் பிரபாகரன் ஆயுதம் ஏந்தியும் களம்கண்ட காலத்திலும் இந்த வெறிநாய்களின் பொல்லா வெறிக்கூச்சலுக்கும் பாய்ச்சலுக்கும் நடுவிலேதான் போராட வேண்டிய தாயிற்று.

வீறு கொண்டு நிமிர்ந்த தந்தை செல்வாவின் தொண்டர்களும் தலைவர் பிரபாகரனின் புலிக ளும் மட்டும் அல்ல வீடு வீடாக வீதி வீதியா கப் போரோடு தொடர்பில்லாத ஏதுமறியாத குழந்தை களும் பெண்களும் முதியவர்களும் கூடப் பல்லாயி ரம் பிணங்களாய் விழுந்தார்கள்.

சிங்களக் காட்டேரிகளின் குருதிக் கூத்தில் தமிழீழமண் சிவப்பாயிற்று.

1956 ஜூன் 14இல் நாடாளுமன்றத்தில் தனிச் சிங்களச் சட்டம் அரங்கேறியது.

தமிழரசுக் கட்சித் தொண்டர்களுடன் 1956ஜூன் 5இல் கொழும்பு காலிமுகத் திடலில் தந்தை செல்வா தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்து உண்ணா நோன்பிருந்து அறப் போராட்டம் நடத்தியதையும் கொலை வெறிச் சிங்களவர்கள் பாய்ந்து உண்ணா நோன்பிருந்த தொண்டர்களைத் தடிகொண்டு தாக்கியதையும் வரலாறு பதிவு செய்திருக்கிறது.

அன்று நடைபெற்ற நிகழ்ச்சி சிங்கள இனவெறி யர்களை உலகுக்கு அடையாளம் காட்டிய நிகழ்ச்சியாகும்.

தாமரைக்குளம் செல்லையா அவர்கள் கடுமை யாகத் தாக்கப்பட்டார். அவருடைய காதுகளில் ஒன்றை வெறி பிடித்த சிங்களவன் ஒருவன் தன் பற்களால் கடித்துத் துண்டாக்கி வெளியே துப்பினான்.

இனவெறிக் கலவரம் பெரிதாய் வெடித்துச் சிங்கள இனவெறியர்கள் தமிழர்களின் செந்நீர் வெள்ளத்தில் நீச்சல் அடித்த இனவெறி ஆண்டு 1958.

இக்கலவரத்தில் 355 தமிழர்கள் சிங்கள இனவெறிக்குத் துடிக்கத்துடிக்க இரையானார்கள்.

இதழியலாளர் தார்சி வித்தாச்சி இக்கலவரம் பற்றி ‘அவசர காலச் சட்டம் 58’ என்னும் நூலில் இப்படி எழுதுகிறார்:

‘எட்டு மாதக் கர்ப்பிணியான ஒரு தமிழ்ப் பெண்ணின் வயிற்றைச் சிங்கள இனவெறியர்கள் கத்தியால் கிழித்து செந்நீரில் அவள் துடிதுடித்துச் சாக விட்டுச் சென்றார்கள்’.

வெலிக்கடைச் சிறையில் 1983இல் நிகழ்ந்த தமிழ்ச் சிறைஞர்களின் படுகொலைகள் இனவெறி கொண்ட சிங்களச் சிறைச்சாலைக் காவலர்கள் சிங்களச் சிறைஞர்களின் கூட்டு வெறியாட்ட மாகும்.

சிறைச்சாலையின் சிங்களக் காவல் படையினர் தமிழீழப் போராளி குட்டிமணியின் கண்களைக் கத்தியால் குத்திப் பிடுங்கிச் செருப்பின் கீழே போட்டு மிதித்துச் சிதைத்து வெறிக் கூத்தாடி னார்கள்.

கொழும்பை ஒட்டிய வெலிக்கடைச் சிறைச் சாலையில் நடந்த இக்கொலை வெறிக்கூத்தில் 52 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டதை அறி வோம்.

நினைத்துப்பார்க்க முடியாத ஒரு கொடுமை தென்தமிழ் ஈழத்தில் 1998இல் நிகழ்ந்தது.

சிங்களப் படை வெறியர்கள் கோணேசுவரி என்ற தமிழ்ச்சியைப் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தியபின் அவள் பெண்குறியில் வெடிகுண் டைச் செருகி வெடிக்கச் செய்து துடிக்கத்துடிக்க அவளைச் சாகடித்தார்கள்.

நான் கேட்கிறேன் தமிழன் என்றேனும் ஒரு சிங்களவனின் காதைக் கடித்திருக்கிறானா? ஒரு சிங்களவனின் கண்ணைப் பிடுங்கியிருக்கிறானா? ஒரு சிங்களப் பெண்ணின் பெண் குறியை வெடிகுண்டு வைத்துக் கிழித்திருக்கிறானா? ஒரு சிங்களக் கர்ப்பிணியின் கருவைக் கத்தியால் குத்தி வெறியாடி இருக்கிறானா?

தமிழீழம் இந்த இனவெறி நாய்களை எதிர்த்துத் தான் தலைநிமிர்ந்து களமாடுகிறது.

அறப்போராட்டமும் ஆயுத அடக்குமுறையும்

1949இல் தந்தை செல்வா தமிழரசுக் கட்சியைத் தொடங்கினாலும் 1956இல்தான் அறப்போராட்டம் தொடங்கிற்று.

கடை அடைப்பு கறுப்புக் கொடி ஆர்ப்பாட் டம் உண்ணா நோன்பு ஒத்துழையாமை மறியல் போராட்டல் என்று தமிழீழ மக்கள் களமாடி னார்கள்.

திட்டமிட்டுத் தந்தை செல்வா காலிமுகத்திட லில் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து நடத்திய உண்ணா நோன்பு நிகழ்ச்சி தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனை ஆயிற்று.

சிங்களப் படை வெறியர்களும் சிங்களக் காடையர்களும் தமிழர்களுக்கு எதிராகச் சிங்கள இனவெறி அரசால் உசுப்பி விடப்பட்டனர்.

**தொடரும்...**

## மத பிரசாரம் செய்ய ஐ.ஏ.எஸ்.அதிகாரி உமா சங்கருக்கு தடை



பொது அமைதிக்கு குந்தகம் ஏற்பட வாய்ப்புள்ளதால் மதப் பிரசாரம் செய்வதற்கு ஐ.ஏ.எஸ்.அதிகாரி சி.உமா சங்கருக்குத் தடை விதித்து, தலைமைச்செயலாளர் கே.ஞானதேசிகன் கடிதம் எழுதியுள்ளார்.

அகில இந்திய பணிகள் (நன்னடத்தை) விதி 1968-ன் 3(1)-ம் பிரிவை உங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன். அதில், இந்த விதியின் கீழ் வரும் ஒவ்வொரு வரும். (ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்) எந்த நேரத்திலும் ஒருமைப்பாட்டை கட்டிக்காக்க வேண்டும் என்றும் பணிக்கு தன்னை அர்ப்பணிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும், தகுதிக்கு ஏற்புடையது அல் லாத பணிகளில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் யாரும் ஈடுபடக் கூடாது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உங்களைப் பற்றி அரசின் கவனத் துக்கு ஒரு தகவல் கொண்டு வரப்பட்டது. அதில், கன்னியாகுமரி மாவட்டம் புதுக்கடை போலீஸ் நிலையத் தில் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்படும் அளவுக்கு, பொது அமைதிக்கு குந்தகம் ஏற்படும் விதத்தில் 16ஆம் தேதி நீங்கள் ஈடுபட்டிருக்கிறீர்கள்.

தற்போது அரசுக்கு மற்றொரு தகவலும் வந்துள்ளது. அதில், 24ஆம் தேதி முதல் 26ஆம் தேதி வரையில், திரு நெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங் களில் நீங்கள் பிரசங்கம் மற்றும் பிரச்சார நடவடிக்கை களில் ஈடுபடவுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

அதனால் சமுதாயத்துக்குள் வகுப்புவாதம் ஏற்பட்டு, ஒற்றுமையும் பொது அமைதியும் குலையக்கூடும் என் றும் கூறப்பட்டுள்ளது. எனவே நீங்கள் ஐ.ஏ.எஸ் அதிகாரி என்ற முறையில், அதற்கு ஏற்புடையதல்லாத இந்தச் செயல்பாட்டில் ஈடுபடக்கூடாது என்று உங்களுக்கு உத்தரவிடுகிறேன்.

இதற்கு மாறாக நீங்கள் செயல்பட்டால், சம்பந்தப்பட்ட நடத்தை விதியின் அடிப்படையில் உங்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை கூறிக்கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு செப்டம்பரில் சேலம் பகுதியில் கிறிஸ்தவ அமைப்பு ஒன்றின் சார்பில் சி.உமாசங்கர் பேசியதாகத் தெரிகிறது. இதில் மற்றொரு மதத்தவரின் மனது புண்படும் வகையில் அவர் பேசியதாக குற்றச் சாட்டுகள் எழுந்தன. இதுசம்பந்தமாக அவர் மீது வழக்கும் தாக்கல் செய்யப்பட்டு இருந்தது குறிப்பிடத் தக்கது.





முருகன்



பேரறிவாளன்



சாந்தன்



# உண்மையைத் தேடி

இராசீவ் காந்தி கொலை வழக்கில் எதிர்த் தரப்பில் வாதிட்ட ஐயா செ. துரைசாமி அவர்கள் கூறும் போது விடுதலைப்புலிகள் தனிப்பட்ட விரோதம் காரணமாகத்தான் கொலை செய்தனர் என்று சிபிஐ கூறியுள்ளது. ஆனால் அரசுத் தரப்பில் அதற்கு அதரவாக எந்த ஒரு சாட்சி ஆவணமும் வைக்க வில்லை.

மேலும் துடாச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப் படத் தக்க குற்றம் இழைத்தற்கான தடயங்கள் சமர்ப் பிக்கப்படவில்லை. ஆகவே அவர்கள் தடா சட்டத் தின் கீழ் எந்தக் குற்றமும் புரியவில்லை என்று கூறி விடுதலை செய்தது உச்சநீதிமன்றம். இதை நாம் சற்றே கவனித்துப் பார்க்க வேண்டும். முதல் கோணல் முற்றும் கோணல் என்பார்கள். அதுபோல் சி.பி.ஐ அதிகாரிகள் விசாரணையை ஆரம்பித்த முறையை விசாரித்து குற்றம் சாட்டிய முறை தவறு என்று நீதிமன்றம் கூறுகின்றது. அப்படியென்றால் அதில் எப்படி உண்மையைக் கண்டுபிடிக்க முடியும். சட்டம் தெரியாமல் வழக்கைப் பதிவு செய்ததாக நீதிபதிகள் கூறுகின்றார்கள் என்று தானே பொருள். சட்டம் தெரியாதவர்கள் எப்படிச் சிறப்பாகத் திறம்பட செயல்பட்டு இருக்க முடியும்? உச்ச நீன்ற நீதிபதிகள் சி.பி.ஐ. இந்த வழக்கின் விசாரணையில் சிறப்பாக செயல்பட்டது என்று புகழ்ந்து கூறியதாக விசாரணை அதிகாரிகள் சொல்லிக் கொள்கின்றனர். தவறுதலாக வழக்கினை பதிவு செய்து தவறான கண்ணோட்டத்தோடு விசாரித்த அதிகாரிகளுக்கு பாராட்டுத் தெரிவிப்ப தில் ஏதேனும் உள்நோக்கம் இருக்குமோ? அல்லது அதிகாரிகள் நீதிமன்றத்தை இழிவு படுத்துகின்ற னரா?

பல ஆண்டுகள் எந்தக் குற்றமும் செய்யாமல் தண்டனை அனுபவித்தவர்களுக்கு நீதி கிடைக்க வில்லை இந்திய நீதிமன்றத்தில். குற்றம் செய்யா தவர்களை சித்திரவதை செய்து சிறைப்படுத்திய அதிகாரிகளை ஏன் விட்டு வைத்திருக்கிறது நீதிமன் றம்? அவர்கள் மீது துறை சார்ந்த விசாரணை நடத்தி,

8 • இராஜாசிங்

நீதியான நடிவடிக்கை எடுக்க ஏன் உத்தர விட வில்லை? எதிர்த்திசையில் இருந்து வாதாடிய வழக்கறிஞர்களின் சாதுரியத்தால் நீதி மன்றங்களின் நிலையும், நிலைப்பாடும் பாமரர்க்கும் தெளிவாகப் புரிகின்றது. இச்செயல் நம் மனதை சற்றே நெருடு கின்றது. சந்தேகங்களை கிளப்புகின்றன. இன்று பல அதிகாரிகள் தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளனர்.

1) பேரரறிவாளனை விசாரித்த அதிகாரி, பேரரறி வாளன், நான் பேட்டரி வாங்கிக் கொடுத்தேன் என்று கூறி உள்ளார். ஆனால் அது எதற்கு பயன் படுத்துவார்கள் என்று தெரியாது என்று கூறியுள் ளார். ஆனால் விசாரணை அதிகாரி அதை கொலைக்கு தெரிந்தே வாங்கிக் கொடுத்தேன் என்று அவர் கூறியதாக மாற்றி எழுதி நீதிமன்றத்தை ஏமாற்றினேன் என்று கூறியுள்ளார்.

2) ரகோத்தம்மன் தான் எழுதிய புத்தகத்தில் குற்றவாளிகளைத் தப்பிக்க விட்டோம். தப்பிக்க அனுமதித்தோம் (உண்மை குற்றவாளிகளை) என்று எழுதியுள்ளார். மேலும் தனியார் தொலைக்காட்சிப் பேட்டியில், மேல் அதிகாரிகள் உண்மையைக் கண்டு பிடிக்க முடியாதபடி என்னைத் தடுத்து ஏமாற்றினார்கள் என்று கூறியுள்ளார். அப்படி இருக்க எப்படி உச்சநீதிமன்றம் சென்று நிரபரா திகள் குற்றம் செய்தனர் என்று கூற முடிந்தது. இது நீதி மன்ற அவமதிப்பு செயல் அல்லவா? இதை நீதிமன்றம் உணராமல் போனது என்?

3) நீதிபதி ஒருவர், நாங்கள் எங்களுக்கு முன்னால் சொல்லப்பட்ட கருத்துக்களைப் பார்த்தோம். பின்ன ணிகளை ஆராயவில்லை என்று கூறியுள் ளார். அப்படியென்றால் நீதிமன்றத்துக்குப் பின்னால் செய்யப்பட்ட சதிவலைகளை ஆராயவில்லை என்று பொருள் கொள்ளலாம் அல்லவா?

4) ஐயா பழ. நெடுமாறன் அவர்கள் தீர்ப்பு வந்த அன்று கூறியது எங்களுக்குப் போதிய கால அவகாசம் கொடுக்கப்படவில்லை. அவ்வாறு கொடுத்திருந்தால் இவர்களையும் (3 பேரையும்) விடுவித்திருப்போம்.

5) அண்ணன் வைகோ அவர்கள், இது யாரும் சற்றும் எதிர்பார்க்காத தீர்ப்பு என்று கூறியுள்ளார். ஏனென்றால் அவர்கள் அந்த நீதிமன்றத்தில் நடந்த விவாதங்களை உன்னிப்பாகக் கவனித்து வந்தார்கள்.

நீதி என்றால் நிகழ்வுகளைப் பகுத்து ஆராய்ந்து உண்மையை அறிந்து கொள்ளுதல் என்று பொருள். நீதிமன்றத்தில் நீதிபதியாய் இருப்பவர்கள் தனக்கு முன்னால் கூறப்படும் கருத்துகளில் உண்மைத் தன்மை இருக்கின்றதா? இல்லையா? என்று பகுத்து ஆராய்ந்து நடுநிலைமை மாறாமல் தீர்ப்புக் கூற வேண்டும் இதுதான் நீதிமன்றம்.

எதிர்த்தரப்பு வழக்கறிஞர்கள் சி.பி.ஐ. கூறிய கதையில் நிறைய ஓட்டைகளும் கணக்கில் அடங் காத, விடைகிடைக்காத கேள்விகளும் உள்ளன. அதில் சிலவற்றை நாங்கள் எடுத்து இயம்புகின் றோம். அதற்கு உங்கள் ஆய்வுக்குழு அதற்கான விளக்கத்தையும் அளித்துள்ளது.

குண்டு வெடிக்கப் பயன்படுத்திய ஆர்.டி.எக்ஸ். வெடிமருந்து எங்கு இருந்து வாங்கப்பட்டது? யார் அதை விற்றது? யார் அதை வாங்கியது? ஆர்டிஎக்ஸ். வெளிச்சந்தையில் கிடைக்காத தருவாயில் ராணு வத்திடம் மட்டுமே கிடைக்கக் கூடியது சிவராச னுக்கு எப்படிக் கிடைத்தது? யார் சிவராசனுக்கு வெடி மருந்து கொடுத்து இருப்பார்கள்?

இலங்கை இராணுவமா? இலங்கை அரசு அனுப்பிய நபர் சிவராசன் என்பதற்கு இது ஒரு உதாரணமாக அமைந்திருக்கின்றது. இந்தச் செய்தி விசாரணை அதிகாரிகளுக்கு தெரிந்திருந்ததால் அவர்கள் இது பற்றி நீதி மன்றத்தில் எந்த ஒரு கருத்தையும் கூறவில்லை. இதை நீதிமன்றம் ஏன் கண்டு கொள்ளவில்லை என்பது சற்றே விந்தையாக இருக்கின்றது.

தனு அணிந்த பெல்ட் பாம் தயாரித்தது யார்? எங்கு பரிசோதிக்கப்பட்டது? தனு அணிந்த சுடிதார், செருப்பு, டி. நகர், புரசைவாக்கத்தில் வாங்கப்பட்டது என்று கண்டறிந்த விசாரணை அதிகாரி பெல்ட் பாம் தயாரிப்புக்கு பயன்படுத்திய டெனிம் துணி எங்கே வாங்கித் தயாரிக்கப்பட்டது என்று கூற மறுத்தது மர்மமாக உள்ளது. மேலும் அதிகாரிகள், பெல்ட் பாம் முன்புறம் கட்டப்பட்டதா, பின்புறம் கட்டப்பட்டதா என்று ஆராய அமெரிக்கா சென்று வந்தனர். அனால் முக்கியச் சான்றாக கருதப்படும்

பெல்ட் பாம் எங்கு தயாரிக்கப்பட்டது என்று ஆராய்ச்சி செய்ய மறந்து விட்டனாரா, மறுத்து விட்டனரா? இதை நீதிமன்றம் அவர்களுக்கு உணர்த்தாதது என்?

3) ராசீவை ஸ்ரீபெரும்புதூருக்கு வரச்சொல்லி கட்டாயப்படுத்தியது யார்? அப்போது இருந்த கவர்னர் பீஷ்ம நாராயணன் ஸ்ரீபெரும்புதூரில் தங்குவதற்கு ஏற்ற இடம் இல்லை என்று கூறியதையும் பொதுப்பணித் துறையின் பயணியர் விடுதி வி.வி.ஐ.பி. தங்குவதற்கு ஏற்ற இடமில்லை என்று கூறிய அதிகாரிகளை அலட்சியப்படுத்தியவர்களை விசாரித்து நீதிமன்றத்தில் கூறாமல் போன சி.பி.ஐ. யின் நிலைமையை நீதிமன்றம் ஏன் உணரவில்லை.

4) யார் சிவராசனிடமிருந்து ரூ. 17,14,700 வாங்கியது? எதற்காக அந்தப் பணம் அந்த டி.எ.ஜி என்ற மர்ம நபருக்குக் கொடுக்கப்பட்டது? சிவராசனின் நாட்குறிப்பில் டி.எ.ஜிக்கு பணப் பரிமாற்றம் பற்றிய குறிப்பு உள்ளது. டி.ஏ.ஜி என்றால் முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் நிறுவனம் இதன் தலைவராக இருந்தவர் நாராயணன். இவர்தான் ராசீவ் கூட்டத்தில் எடுக்கப்பட்ட வீடியோ ஆதாரத்தை மறைத்தவர் என்று அண்ணன் சீமான் அவர்கள் நடத்திய தந்தி டிவியில் மக்கள் முன்னால் எனற நிகழ்ச்சியில் விசாரணை அதிகாரி ரகோத்தம்மன் தெரிவித்தார். சி.பி.ஐ. நீதிமன்றத்தில் சிவராசனின் டைரி சமர்ப்பிக்கப்பட்டு அதில் நீதிமன்றத்தில் குத்தப் படும் முத்திரையும் உள்ளது.

வழக்கறிஞர் துரைசாமி அவர்கள் எழுதிய புத்தகத்தில் இது விரிவாக விளக்கப்பட்டுள்ளது. ஆனால் சி.பி.ஐ. தலைமை அதிகாரி மூலமாகத்தான் சிவராசன் ராசீவ் காந்தி சுற்றுப் பயணத்தையும் விமானம் தாமதமாக புறப்படுகின்றது என்ற செய்தியையும் அறிந்து இருப்பானோ. ஏன் இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்த அதிகாரிகள்தான் விமானத்தை தாமதப்படுத்தி இருப்பார்கள். விமானத்தில் சிறிய கோளாறை உருவாக்கி விமானிக்கு ஆலோசனை கூறுவது போல் பேசி, அதைச் சரிசெய்து இருப்பார்கள். அவர் சரியான நேரத்தில் வந்திருந்தால் சிவராசன் தன் காரியத்தைச் சாதிப்பதில் சிக்கல் ஏற்பட்டு இருக்கும். ஏனென்றால் அங்குள்ள அதிகாரிகள் துடிப்புடன் இருந்திருப்பர். தானுவின் நடவடிக்கையில் வித்தியாசம் தெரிந்து இருக்கும். தானு மாட்டிக் கொண்டு இருப்பார். அனைவரும் சோர்வடைந்த நேரத்தில் வந்தால் சிவராசன் எண்ணிய காரியம் சுலபமாக முடிந்தது. ராசீவ் காந்தி சரியான நேரத்தில் வந்திருந்தால் பெரும் ஆபத்து மற்றும் சேதம் தமிழகத்தில் நிகழ்ந்திருக்கும். அப்போது தமிழ்நாடு ஒன்றிணைந்து உண்மையை உலகிற்கு வெளிப்படுத்தி இருக்கும் அப்போது குற்றவாளி தப்பித்திருக்க இயலாது என்பதால் அதிகார மட்டத்திலுள்ள அதிகாரிகள் சாதுரியமாக செயல்பட்டு அவர்களே விமானத்தைத் தாமதப்படுத்தியிருப்பர்.

5) எதற்காக மரகதம் சந்திரசேகரின் மகன், சிவராசனிடம் இருந்து ஐந்து லட்சம் வாங்கினார். சிவராசனுக்கு உதவியதற்காகவா? அவரை ஏன் குற்றவாளியாகச் சேர்க்கவில்லை? யார் சிவராசனுக்கு ஸ்ரீபெரும்புதூரில் தங்குவதற்கு உதவி செய்தது, சிவராசன், தானு சம்பவம் நடந்த அன்று ஸ்ரீபெரும்புதூரில் எங்கு தங்கினர். டிக்சன், சாந்தன், கூட்டத்தில் என்ன செய்து கொண்டிருந்தனர் என்று ஐயா துரைசாமி அவர்கள் கேள்வி எழுப்புகின்றார்.

விசாரணை அதிகாரி ரகோத்தமன் தன் புத்தகத்தில் எழுதி இருந்த போது, அவருடைய மகள் அந்தப்படத்தைப் பார்த்து மழலை மொழியில் தனக்குத் தெரியும் என்று கூறினாள் (அக்குழந்தை வாய் பேசமுடியாத மாற்றுத திறனாளி குழந்தை) அப்போது லலித் சந்திரசேகர் தன் மனைவியைப் பார்த்து, ஆவேசப்பட்டு கத்தியதாகவும் குழந்தையை உள்ளே எடுத்துச் செல் என்று கூறியதாகவும் சொல்கிறார். அப்படியென்றால் மரகதம் சந்திரசேகரின் மகன் பாதுகாப்பில்தான் அந்தக் குற்றவாளிகள் இருந்திருக்கின்றனர் என்று பொருளாகிறதா இல்லையா? இச்செய்தியை ஏன் சி.பி.ஐ. நீதிமன்றத்தில் மறைத்தனர்? அப்படியென்றால் இவர்கள் நீதிமன்றத்தை ஏமாற்றினார்களா?

சதிகாரர்கள் தங்களது பணத்தேவைக்கு தங்க பிஸ்கட்டுகளை இலங்கையிலிருந்து கொண்டு வந்து மாற்றினர் என்று கூறுகின்றனர். ஆனால் மாற்றிய இடத்தை கண்டுபிடித்துத் தெரிவிக்கவில்லை. ஆனால் சாப்பிட்ட பிரியாணிவரை கண்டுபிடித்து உள்ளனர். ஏனென்றால் அவர்கள் செலவழித்த பணம் இந்தியாவிலிருந்து பெறப்பட்டது. இவர்கள் கண்டுபிடித்த ஆதாரங்கள் இவர்களால் தயாரிக்க முடிந்த சந்தனமாலை வாங்கிய பில், பேட்டரி வாங்கிய பில் போன்றவைகளே. அக்கால கட்டத்தில் புலி அமைப்புக்கு தமிழகத்தில் பெரும் ஆதரவு இருந்தது. அப்படிப்பட்ட நேரத்தில் சிவராசன் புலிகளுக்கு ஆதரவாக உள்ள முக்கிய பிரமுகர் களோடும் தலைவர்களோடும் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளாமல் மரகதம் சந்திரசேகர் குடும்பத்தோடு மட்டும் அதிகத் தொடர்பு வைத்திருந்திருக்கிறார்.

ஏனென்றால் புலி ஆதரவுத் தலைவர்களுடன் தொடர்பு வைத்திருந்தால் இந்தத் தகவல் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களுக்குச் சென்றுவிடும் என்பதால்தானே. புலிகளின் தலைவர், தனது படையினர், மற்றும் ஆதரவாளர்கள் துணையோடு இந்தக் கொடுஞ்செயல் நிறைவேறாத வண்ணம் தடைசெய்திருப்பார். ஆகவே சிவராசன் புலிகளுட னும் அவர்கள் ஆதரவாளர்களுடனும் எந்தவிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளவில்லை.

சிவராசன் மற்றும் சுபாவிற்கு இந்தியாவிலிருந்து பெங்களூர் வழியாகத் தப்பிச்செல்ல வகை செய்தது யார்? சி.பி.ஐ. அதிகாரிகள் விடுதலைப்புலிகள் வஞ்சகத்தால் கொலை செய்தனர் என்று கூறினார் கள். ஆனால் சுப்பிரமணியசாமி மட்டும் பணத் தேவைக்காக ராசீவ் காந்தி கொலை செய்யப் பட்டார் என்று கூறுகிறார் என்றால், அதன் பின்னணி என்ன? சிவராசனின் டைரியில் இருந்த பணப்புழக்கம் பற்றி செய்திகள் விசாரணை அதிகாரிகளுக்குத் தெரியவில்லையா? சுப்பிரமணிய சாமிக்கு மட்டும் எப்படித் தெளிவாகத் தெரிந்தது? மேலும் இந்தக் கொலை வழக்கில் தொடர்புடைய முக்கிய குற்றவாளி சிவராசனுக்கு, முருகன் எடுபிடி வேலை செய்பவராக இருந்திருக்கிறார். தனது வயிற்றுப் பிழைப்புக்காக. அன்றைய தேதியில் அவருக்கு வயது 17. அந்த வயதில் அவர் எப்படி மாஸ்டர் பிளான் செய்திருக்க முடியும். நளினி முருகனுடைய காதலி. அந்த வயதில் ஏற்படும் ஈர்ப்பு அவர்களுக்கு இருந்திருக்கிறது. அவர்கள் இருவரும் கர்நாடகா சென்றிருந்தனர். அங்கு யார் யாரைச் சந்தித்தனர்? எங்கு தங்கினர்? சந்தித்தவர்களை ஏன் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்து சாட்சி கூற வைக்கவில்லை? சுப்பிரமணியசாமி கர்நாடகாவில் உள்ளார் என்பதையும் நினைவில் வைக்க வேண்டும். மேலும் இருவரும் கர்நாடகா சென்று தமிழகம் திரும்பும்போதுதான் சைதாப்பேட்டையில் வைத்து கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விசாரணை அதிகாரிகளை இயக்கியவர்களும் கர்நாடகாவிலிருந்து இருந்திருக்கின்றனர் என்பது தெளிவாகத் தெரிகிறது, கார்த்திகேயனும் கர்நாடகாவில் முன்பு பணிசெய்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. கூலிப்படையின் ஏஜெண்ட், சைதாப்பேட்டையில் இருந்திருக்க வேண்டும். பேரறிவாளன் இதில் எள்ளளவும் சம்பந்தப்படா தவர். இவர் தந்தை பெரியாரின்பால் பேரன்பு கொண்டு, அவர் கொள்கையை பரப்பியதன் அடிப் படையில் அவர் மகன் தெளிவாக பழிவாங்கப்பட் டுள்ளார் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

சாந்தன், இவர் விடுதலைப்புலிகளின் இயக்கத் தில் ஒரு தலைசிறந்த போராளி. தலைவர் பிரபாகர னின் தலைமையின் கீழ் இயங்கும் தமிழர் விடுதலை இயக்கத்தை சிதைப்பதற்காக சாந்தன் சேர்க்கப்பட் டுள்ளார் என்ற ஐயமும் உண்டு. காங்கிரஸ்காரர்கள் தங்களது தலைமையைக் கேவலப்படுத்தியவர்களை எண்ணிப்பார்த்து தமிழர்களின் உண்மையான உணர்வுகளுக்கு மதிப்பளித்து தமிழ் ஆர்வலர்களை மதித்துச் செயல்பட்டால் தமிழகத்தில் அவர்களது நிலை உயரும்.

இல்லையென்றால் தமிழகத்தில் காங்கிரஸ் இயக்கம் இருந்ததற்கான அறிகுறி இல்லாமல் போகும் என்பது உண்மை.

இராசீவ் காந்தி கொலையில் உண்மைக் குற்றவாளியை உலகத்திற்கும் இந்தியாவிற்கும் சுட்டிக்காட்டுவது தமிழ்மொழியால் இணைந் துள்ள தமிழ் மக்களின் முக்கியக் கடமையாகும்.

◆

தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக திருமதி காயத்திரி அவர்கள் பணியாற்றுகிறார்கள். இவர் எஸ்.எஸ்.எல்.சி. எனப்படும் பதினோராவது வகுப்பு வரை மட்டுமே படித்தவராம்.

பல்கலைக்கழக மானியக்குழு 13 ஜூன் 2013 அன்று வெளியிட்ட விதிகளின்படி பல்பகலைக் கழகத் துணைவேந்தராக ஒருவர் வரவேண்டுமானால் அவர் ஒரு மிகச்சிறந்த கல்வியாளராக விளங்க வேண்டும். மேலும் பத்து ஆண்டுகள் அவர் ஒரு பல்கலைக்கழகத்தில பேராசிரியராகப் பணியாற்றி இருக்க வேண்டும். அல்லது பத்து ஆண்டுகளுக்குக் குறையாமல் அரசின் அறிதேற்புப் பெற்ற சிறந்த கல்வி நிறுவனத்தில் ஆய்வுப்பணியை மேற்கொண்டவராக இருக்க வேண்டும். (விதி எண். 7.3.0)

இவை எவற்றையும் நிறைவு செய்யாமல் வெறும் எஸ்.எஸ்.எல்.சி. மட்டுமே படித்த திருமதி காயத்திரி அவர்களைத் துணைவேந்தராகப் பதவியில் அமர்த்தியிருப்பது கல்வியாளர்களுக்கு மிகுந்த மனவேதனையைத் தருகிறது என்கிறார்களாம். இதுவா கல்வியின் தரத்தை உயர்த்தும்? மேலும், எஸ்.எஸ்.எல்.சி மட்டுமே படித்த இவரைத் துணைவேந்தராகக் கொண்ட பல்கலைக்கழகம் வழங்கும் இளங்கலை, முதுகலைப் படிப்புகள் பல்கலைக்கழக மானியக்குழுவின் (யு. ஜி. சி) அறிந்தேற்புப் பெற்றவையா? அவ்வாறு இல்லை எனில் பல்கலைக்கழக மானியக்குழு அதைப்பற்றிய பொது அறிக்கையை ஏன் விடவில்லை?

மேலும் இந்தப் பல்கலைக் கழகம் ஆய்வுப் பட்டத்திற்கான நுழைவுத் தேர்வுகளையும் பிப்ரவரி இரண்டாம் தேதி நடத்தப் போவதாக நாம் கேள்விப்படுகிறோம். கல்லூரி வாசலையே மிதிக்காத இந்த அம்மையார் எவ்வாறு பி.ஏ., எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி., போன்ற பட்டங்களை வழங்கும் பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தராக இருக்கத் தகுதியானவர் என்று தமிழக அரசால் கருதப்பட்டார்? அல்லது இவரது கல்வித்தகுதியே தமிழக

# இசை பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள் தமிழக அரசின் கட்டுப்பாட்டிற்குள்தான் உள்ளதா?



முதல்வருக்கு எடுத்துக்கூறப்படவில்லையா என்பதே நமது சந்தேகம்.

இவர் நன்றாக வீணை வாசிப்பதால் இவரைத் துணைவேந்தர் ஆக்கினார்கள் என்றால் அடுத்தடுத்து இவ்வாறு கல்வித்தகுதியே இல்லாமல் வெறும் வீணை வாசிப்பதையே வைத்தோ அல்லது பாட்டுப் பாடுவதை வைத்தோதான் துணைவேந்தர்கள் இப்பல்கலைக்கழகத்தில் தேர்ந்தெடுக்கப்படு வார்களா? அல்லது எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் மட்டும்தான் இனி இப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்களா? அப்படி என்றால் நாட்டில் தற்போது எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்த லட்சோப லட்சம் இளைஞர்கள் இனி இசைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர்களாகத் தங்களில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று கனவு காணலாமா? என்ன நடக்கிறது இங்கே?

அது மட்டுமல்ல இந்தப் பல்கலைக்கழகத்தில் எட்டாவது வரை மட்டுமே படித்துவிட்டு டிப்ளமோ படித்த திருநாகேஸ்வரம் டி.ஆர்.எஸ். மணிகண்டன் என்பவர் எம்.ஏ., (மிருதங்கம்) படிப்பிற்கு வருகைப் பேராசிரியராக பணியாற்றுகிறார். இது தற்காலிகமானதுதான் என்றாலும் எத்தனையோ எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி என்று படித்து விட்டு நெட், ஸ்லெட் ஆகிய தேர்வுகளிலும் தேறிய இளைஞர்கள் இருக்கும்போது அவர்களை இந்தப் பல்கலைக்கழகம் பயன்படுத் தாதது ஏன் என்ற கேள்வியும் எழுகிறது. ஆசிரியர்கள் தேர்விலும் முறைகேடுகள் நடந்துள்ளது நமக்குப் புலப்படுகிறது. ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் எவ்வாறு தேர்வு செய்யப்பட்டனர் என்ற கேள்வி இசைக்கல்வியைப் படித்த அனைவர் மனதிலும் எழுந்துள்ளது.

மேலும் எத்தனையோ இசை ஆசிரியர்கள் ரூபாய் 5000 சம்பளத்திற்காகப் பல ஊர்களில் உள்ள அரசுப் பள்ளிகளில் பணியாற்றுகிறார்கள். இவர்களில் பலர் எம் பில், பி எச்டி, நெட், ஸ்லெட் போன்றவற்றைப் படித்தவர்கள். இவர்கள் வகுப்பு எடுப்பதோ பள்ளிகளில். ஆனால் எட்டாம் வகுப்பு மட்டுமே படித்த ஆசிரியர் எடுக்கும் வகுப்போ எம்.ஏ., இவருக்கு வழங்கப்படும் சம்பளமோ மாதம் ரூபாய் 20 000. எங்கே செல்கிறது தமிழகம்? கல்வியாளர்கள் வருத்தப்படுவதே இனி மாணவர்கள் இசையில் பி.ஏ., எம்.ஏ., எம்பில், பிஎச்டி போன்றவற்றைப் படித்தால் அவர்களுக்கு எதிர் காலம் உண்டா என்பதே. படித்த இளைஞர்களைப் படுகுழியில் தள்ளுவதா கல்வி? தமிழக அரசு இதனைச் சரி செய்ய வேண்டும்.

மற்றொரு கேள்வி. உழவன் நாட்டிற்காக உயிரைக் கொடுக்கிறான். அவனுடைய இசை மக்களிசை அல்லது நாட்டுப்புற இசை. இதில் எம்.ஏ., படிப்பை இந்தப் பல்கலைக்கழகம் துவக்காதது ஏன்? ஏழையின் சிந்தனை செயல் இவற்றிற்கு அரசு மதிப்பளிக்க வேண்டாமா? மக்களிசையில் முனைவர் பட்டம் பெற்ற திரு. புஷ்பவனம் குப்பு சாமி போன்ற பலர் இருக்கிறார்கள் அவர்களில் ஒருவரை ஏன் தேர்ந்தெடுக்கவில்லை. பிராமணியம் தடுத்ததா?

இந்தப் பல்கலைக்கழகத்தின் பெயர் யுஜிசி வலைதளத்தில் உள்ளது. இது அறிந்தேற்புப் பெற்றுள்ளதா? இதனைப்பற்றி யுஜிசி துணைத்தலைவர் திரு தேவராஜ் அவர்கள் ஏன் செய்தி வெளியிடவில்லை? அவர் அடிக்கடி வீணை காய்த்ரி அவர்களைச் சந்திப்பதாலா? அல்லது அவர் மனைவி நிராஞ்சலி தேவராஜ் அவர்கள் ஆட்சிக்குழு உறுப்பினர் என்பதாலா?

இந்தப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியார்களாக மேல்வகுப்பு சமூகத்தைச் சேர்ந்த திருமதி மீனாட்சி, திரு. ஹரீஷ், திருமதி. தேவசேனா, திருமதி. ஸ்ரீவித்யா ஆகியோர் பணியாற்றுகின்றனர். இசை என்பது அனைத்து சமூகத்தினருக்கும் உரித்தானது அல்லவா? ஏன் ஒருசாராருக்கு மட்டும் அதிக இடம் கொடுக்கப்பட்டுள்ளது? இசை தொடர்பான துறைகள் எவற்றிலும் தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பிகளைச் சேர்ந்த ஆசிரியர் எவருமே இந்தப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுவதாக நமக்குத் தெரியவில்லை. இதைப் பற்றி எல்லாம் ஏன் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் கேள்வி எழுப்பவில்லை. இசை பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள் தமிழக அரசின் கட்டுப்பாட்டிற்குள்தான் உள்ளதா? அல்லது உயர்சாதி என்று சொல்லிக்கொண்டு நீதிக்கும் நேர்மைக்கும் எதிராக இருப்பவர்களின் கைகளில் இருக்கிறதா என்ற ஐயம் பொதுமக்கள் அனைவருக்கும் உள்ளது. சரி செய்ய வேண்டிய பொறுப்பு அரசிற்கு உண்டு. ◆

# புரட்சிக்கவி

13

பாரதிதாசனார்




## மனிதர்

மஞ்சம் திருத்தி – உடை
மாற்றி யணிந்தே – கொஞ்சம்
கொஞ்சிக் குலாவிட நாதன் வரும்படி
கோதை அழைக்கையிலே
மிஞ்சிய சோகம் – மிக
மிஞ்சிய அச்சம் – என்
வஞ்சியும் பிள்ளையும் நானிறந்தால் என்ன
வாதனை கொள்வாரோ
நெஞ்சிலிவ் வாறு – நனைந்
தங்குரைக் கின்றான் – அடி
பஞ்சைப் பரம்பரை நாமடி! பிள்ளைகள்
பற்பலர் ஏதுக் கென்பான்
கஞ்சி பறித்தார் – எழுங்
காதல் பறித்தார் – கெட்ட
வஞ்சகம் சேர்சின்ன மானிடச் சாதிக்கு
வாய்ந்த நிலை இதுவா!

**காட்சி இன்பம்**
**பாட்டு**

குன்றின்மீது நின்று கண்டேன்
கோலம்! என்ன கோலமே!
பொன் ததும்பும் ‘அந்திவானம்’
போதந் தந்ததேடி தோழி!

முன்பு கண்ட காட்சி தன்னை
முருகன் என்றும் வேலன் என்றும்
கொன் பயின்றார் சொல்வார், அஃது
குறுகும் கொள்கை அன்றோ தோழி!

கண்ணும் நெஞ்சும் கவருகின்ற
கடலை, வானைக் கவிஞர் அந்நாள்


வண்ண மயில்வே லோன்என் றார்கள்
வந்ததே போர் இந்-நாள்-தோழி!

எண்ண எண்ண இனிக்கும் காட்சிக்
கேது கோயில்? தீபம் ஏனோ!
வண்ணம் வேண்டில் எங்கும் உண்டாம்
மயில் வெற்பும் நன்-றே-தோ-ழி

பண்ண வேண்டும் பூசை என்பார்
பாலும் தேனும் வேண்டும் என்பார்
உண்ண வேண்டும் சாமி என்பார்
உளத்தில் அன்பு வேண்-டார்-தோ-ழி

அன்பு வேண்டும் அஃது யார்க்கும்
ஆக்கம் கூட்டும் ஏக்கம் நீக்கும்!
வன்பு கொண்டோர் வடிவு காட்டி
வணங்க என்று சொல்-வார்-தோ-ழி!

என்பும் தோலும் வாடு கின்றார்
'ஏழை' என்ப தெண்ணார் அன்றே!
துன்பம் நீக்கும் மக்கள் தொண்டு
சூழ்க வையம் தோ-ழி-வா-ழி!



இலங்கை அதிபர் மாளிகையில் முன்னாள் அதிபர் ராஜபக்சே மறந்து விட்டுச்சென்ற ரூ.1,500 கோடி பணம் மீட்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டு உள்ளது.

இலங்கையில் 2 முறை அதிபராக இருந்த ராஜபக்சே, கடந்த 8ஆம் தேதி நடந்த தேர்தலில் 3 வது முறையாக போட்டியிட்டு தோல்வியுற்றார். எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக களமிறங்கிய சிறிசேனா, இலங்கையின் புதிய அதிபராக வெற்றி பெற்று பதவியேற்று உள்ளார்.

தேர்தலில் தோல்வியடைவது உறுதி என அறிந்ததும், ராணுவத்தின் மூலம் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற எண்ணியதாக ராஜபக்சே மீது குற்றச்சாட்டு எழுந்து உள்ளது. இது தொடர்பாக புதிய அரசு விசாரணை நடத்த முடிவு செய்து உள்ளது.

இந்த நிலையில் அலரிமாளிகை எனப்படும் அதிபர் மாளிகையில் ரகசிய அறை ஒன்றில் இருந்த ரூ.1,500 கோடி பணத்தை அதிகாரிகள் கைப்பற்றி உள்ளனர். இதில் இலங்கை ரூபாய் நோட்டுகளும், பல்வேறு வெளிநாட்டு கரன்சிகளும் இருந்தன.

இதன்மூலம் ராஜபக்சே ஆட்சியில் இருந்த போது, அதிகாரத்தைப் பயன்படுத்தி கோடிக்கணக்கான பணத்தை கொள்ளையடித்திருப்பது தற்போது வெளிச்சத்துக்கு வந்து உள்ளது. இந்தப் பணத்தை ராஜபக்சே குடும்பத்தினர் மறந்து வைத்துவிட்டுச் சென்றிருக்கலாம் எனத் தெரிகிறது.

இவ்வாறு அவர்கள் விட்டுச் சென்ற பணமே இவ்வளவு என்றால், எவ்வளவு அதிகமான தொகையை எடுத்துச் சென்றிருக்கக்கூடும்? என அதிபர் மாளிகை அதிகாரி ஒருவர் கேள்வி எழுப்பி உள்ளார். இது குறித்து விசாரணை நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையே ராஜபக்சே குடும்பத்தினர் அரசின் பாதுகாப்பு நிதியத்தில் இருந்து பெருமளவு பணத்தை எடுத்துள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. பாதுகாப்பு நிதியத்தின் தெப்ரபேன் கிளையில் இருந்த ரூ.20 ஆயிரம் கோடி பணத்தில்,

# கொலைகாரக் கொள்ளையன் ராசபக்சே



தற்போது வெறும் ரூ.7 ஆயிரம் கோடி மட்டுமே இருப்பதாகத் தெரிய வந்து உள்ளது.

இதன் மூலம் ராஜபக்சே குடும்பத்தினர் சுமார் ரூ.13 ஆயிரம் கோடியை அபகரித்து இருப்பது தெரிய வந்து உள்ளது என்றும், இலங்கையின் பாதுகாப்பு மற்றும் நிதித்துறை மந்திரியாக இருந்த ராஜபக்சே எவ்வித ஆவணமும் இன்றி இந்தப் பணத்தை எடுத்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிதி மோசடி குறித்து விரிவான விசாரணை நடந்தப்படும் எனத் தெரிகிறது.

மகிந்த குடும்பம் அலரி மாளிகையை விட்டு ஓடும் போது மக்களிடம் கொள்ளை அடித்த பெரும் தொகை சொத்துக்களில் ஒரு பகுதியை அலரி மாளிகையில் விட்டு விட்டு ஓடியுள்ள உண்மை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலப்பகுதியில் அவரது கட்டுப்பாட்டில் இருந்த அலரி மாளிகையில் இருந்த பெருந்தொகைப் பணமும் நகைகளும் 500 மில்லியன் ரூபா வரை யிலான பணமும் பல்வேறு முக்கியக் கோப்புகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

அவற்றை நேரில் பார்த்த ஐக்கிய தேசியக் கட்சி யின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில்

“மகிந்த குடும்பம் அலரிமாளிகையை விட்டுச் செல்லும் போது அனைத்தையும் கைவிட்டு உயிரை மட்டும் எடுத்துச் சென்றுள்ளனர். அவர்களை இவ்வாறு விரட்டியடித்தது உயிரிழந்த தமிழ் மக்களின் ஆத்மாக்களே ராஜபக்சவினர் காப்பெட் வீதிகள் அமைத்தது போக்குவரத்தை இலகுபடுத்த வல்ல மண்ணில் புதைக்கப்பட்ட எலும்புக்கூடுகள் வெளித்தெரியாமல் இருப்பதற்கே“ என்று அவர் குறிப்பிட்டார்.

எங்கள் மக்களை எங்கள் மண்ணில் ஓட ஓட விரட்டிய பாவம் எல்லாவற்றையும் திருப்பதியானி டம் இறக்கி வக்கப் பார்த்தார். பாவம் திருப்பதியான் நாமம் போட்டு அனுப்பிவிட்டார் போலும்.

மந்தரித்து கட்டிய கயிறுகள் மட்டுமே இப்போ மகிந்தவோடு. இது மட்டும் போதுமா? இன்னும் எவ்வளவோ இருக்கு.

◆

# புறநானூற்றுப் புலவர்கள்

அடைநெடுங் கல்வியார்

அண்டர் மகன் குறுவழுதியார்

அரிசில் கிழார்

அள்ளூர் நன்முல்லையார்

ஆடுதுறை மாசாத்தனார்

ஆலங்குடி வங்கனார்

ஆலத்தூர் கிழார்

ஆலியார்

ஆவூர் கிழார்

ஆவூர் மூலங்கிழார்

ஆலங்குடி வங்கனார்

இடைக்காடனார்

இடைக்குன்றூர் கிழார்

இரும்பிடர்த் தலையார்

உலோச்சனார்

உறையூர் இளம்பொன் வாணிகனார்

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

உறையூர் மருத்துவன் தாமோதரனார்

உறையூர் முது கண்ணன் சாத்தனார்

உறையூர் முதுகூத்தனார்

ஊன்பொதி பசுங்குடையார்

எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்

எருமை வெளியனார்

ஐயாதிச் சிறுவெண்டேரையார்

ஐயூர் முடவனார்

சென்னையைச் சேர்ந்தவர் அருள்தாஸ். இவரது மனைவி டெய்சி, இவருக்கு இரண்டு மகள்கள். அதில் 23 வயதான முதல் மகள் தனது தோழியுடன் ஆலந்தூரிலிருந்து அண்ணாநகருக்கு மோட்டார் சைக்கிளில் கடந்த 2007ஆம் ஆண்டு சென்று கொண்டிருந்தார்.

அப்போது மாநகர பஸ்,. மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் இருவரும் படுகாயமடைந்தனர். மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில், அருள்தாசின் மகள் இறந்துவிட்டார். இதையடுத்து, சென்னையில் உள்ள மோட்டார் வாகன விபத்து வழக்குகளை விசாரிக்கும் தீர்ப்பாயத்தில், அருள் தாஸ் குடும்பத்தினர் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்கை விசாரணை செய்த தீர்ப்பாயம் இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் 13.57 லட்சம் வழங்க சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்துக்கு உத்தரவிட்டது.

இந்த இழப்பீடு போதாது என்றும், இழப்பீடு தொகையை உயர்த்தித் தரவேண்டும் என்றும் அருள்தாஸ் மற்றும் அவரது குடும்பத்தினர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த னர். அதேபோல, தீர்ப்பாயத்தின் உத்தரவை எதிர்த்து சென்னை மாநகர அரசு போக்குவரத்துக் கழகம் மேல்முறையீடு செய்தது.

இதனை விசாரித்த நீதிபதிகள், "மனுதாரர்களின் மகள் 23 வயதில் இறந்துள்ளார். அவர் இறக்கும் போது, பி.பி.ஒ நிறுவனத்தில் குழுத் தலைவியாக பணியாற்றியுள்ளார். சம்பளம் அடிப்படையில் மாதம் ரூபாய் 13 ஆயிரம் சம்பளம் பெற்றுள்ளார். இந்த சம்பளத்தொகை அடிப்படையிலும், அவரது வயது, அவரது பெற்றோர்களின் வயது ஆகிய வற்றின் அடிப்படையிலும் ரூபாய் 13,57 லட்சம் இழப்பீடு வழங்க தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

ஆனால், மனுதாரர்கள் இறந்த பெண்ணைச் சார்ந்து வாழ்ந்துள்ளனர். அவரது மகள் சம்பளம், ஊக்க ஊதியம் என்று மாதத்துக்கு ரூபாய் 19 ஆயிரத்து 500 பெற்றுள்ளார். விபத்தில் இறப்ப வர்கள் வாங்கும் சம்பளத்தின் அடிப்படையில் இழப்பீட்டை கணக்கிட வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு ஏற்கெனவே தீர்ப்பளித்துள்ளது.



# இழப்பீடு பெற பாலினப் பாகுபாடு கூடாது

அதே நேரம், போக்குவரத்துக் கழகம் சார்பில் தாக்கல் செய்த வழக்கில், மனுதாரரின் மகள் திருமணமாகி கணவன் வீட்டுக்கு சென்றுவிட்டால், அவர் தன் வருமானத்தை பெற்றோருக்கு கொடுக்க மாட்டார். அதனால், இழப்பீட்டுத் தொகையை ரத்து செய்யவேண்டும் என்று கூறியுள்ளது.

ஆனால், தற்போதைய சமுதாயத்தில் மகன், மகள் என்ற பாகுபாடு இல்லாமல், அனைவரும் தங்களது பெற்றோரைக் கவனித்து வருகின்றனர். தங்களது சம்பளத்தில் ஒரு தொகையை பெற்றோருக்கு கொடுத்து வருகின்றனர்.

அதுவும், மகனைவிட மகள்தான் பெற்றோரை அதிகமாக கவனிக்கின்றனர்.

எனவே, போக்குவரத்துக் கழகத்தின் வாதத்தை ஏற்கமுடியாது. அந்த மனுவைத் தள்ளுபடி செய்கிறோம். எனவே, பாலினத்தின் அடிப்படையில் பாகுபாட்டுடன் இழப்பீட்டுத் தொகையை நிர்ணயம் செய்யமுடியாது. மனுதாரர் மகள் வாங்கிய சம்பளத்தின் அடிப்படையில் மனுதாரர்களுக்கான இழப்பீட்டினை ரூபாய் 17.13 லட்சமாக உயர்த்தி நிர்ணயம் செய்கிறோம். இந்தத் தொகையை, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம் வழங்க வேண்டும்" என்று தெரிவித்து உள்ளனர்.

◆

# 10 பேர் உயிரைக் குடித்த ராணிப்பேட்டை கழிவுநீர் தொட்டி விபத்து: கூடுதல் இழப்பீடு வழங்க உத்தரவு

ராணிப்பேட்டை தோல் தொழிற்சாலை விபத்தில் உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பத்திற்கு, கூடுதல் இழப்பீடு வழங்க பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது. வேலூர் மாவட்டம், ராணிப்பேட்டை அடுத்த சிப்காட்டில் 100க்கும் மேற்பட்ட தோல் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

அவற்றில், 86 தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர், குழாய்கள் மூலம் சிட்கோ கழிவுநீர் பொது சுத்திகரிப்பு நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டு, அங்குள்ள தொட்டியில் சேகரிக்கப்படுகிறது. பின், சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் மட்டும் வெளியேற்றப்படுகிறது. இத்தொட்டி, மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியோடு, தனியார் தோல் தொழிற்சாலைகளால் கட்டப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், சமீபத்தில் இங்கு புதிதாக கழிவுநீர் சேமிப்பு தொட்டி ஒன்று கட்டப் பட்டது. இதில், அளவுக்கதிகமாக கழிவுநீர் சேமிக்கப்பட்டதால் திடீரென கடந்தவாரம் இடிந்து விபத்துக்குள்ளானது. இதில், கழிவுநீர்த் தொட்டியின் அருகே தங்கியிருந்த 10 பேர் சம்பவ இடத்திலேயே மூச்சுத்திணறி பரிதாபமாக உயிரிழந்தார்கள். விபத்தில் பலியான, 10 பேரின் குடும்பத்திற்கு, தலா, 3 லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்க, முதல்வர் பன்னீர்செல்வம் உத்தரவிட்டார்.

இது தவிர தோல் தொழில் அதிபர்கள் சங்கம் சார்பில், தலா, 7 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக பசுமை தீர்ப்பாயம் விசாரணை நடத்திவருகிறது. அதன்படி, இந்த வழக்கில், உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பத்திற்கு தலா 2.5 லட்சம் ரூபாய் கூடுதல் இழப்பீடு வழங்க வேண்டும் என்று பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் அந்த தொட்டியில் கழிவுகளை தேக்கிவைத்த தொழிற்சாலைகளுக்கு, ரூ.50 லட்சம் அபராதம் விதித்துள்ளது. இந்த அபராதத்தை 87 தோல் தொழிற்சாலைகள், தமிழக வளம் மற்றும் சுற்றுச்சூழல்துறையிடம் வழங்க வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்துள்ளது.

◆

# “குந்தியைத் தெய்வமாகப் போற்றும் இந்துத்துவா சக்திகள், பெருமாள் முருகனைக் கண்டிக்க என்ன தகுதி இருக்கிறது?”

**சென்னை ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர்**

**தோழர் பெ.மணியரசன் கண்டனம்!**

சாதிய மதவெறி சக்திகளால் கண்டனத்திற் குள்ளாக்கப்பட்ட எழுத்தாளர் பெருமாள் முருகனுக்கு ஆதரவு தெரிவித்து, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கலைஞர்கள்சங்கம் (த.மு.எ.க.ச) தமிழ்நாடு கலை இலக்கியப் பெரு மன்றம். கருத்துரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பு ஆகிய அமைப்புகளின் சார்பில், சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற் றது.

ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தோழர் இரா. நல்லக்கண்ணு உரையாற்றினார். தமுஎகசகலைஞர் கள், கருத்துரிமைக்கு ஆதரவான பாடல்களை எழுச்சியுடன் பாடினர்.

ஆர்ப்பாட்டத்தில், விடுதலைச் சிறுத்தகள் கட்சித் தலைவர் தோழர் தொல். திருமாவளவன், தமிழர் தேசிய முன்னணித் தலைவர் திரு.பழ.நெடு மாறன். தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் தோழர் பெ.மணியரசன், எஸ்.டி.பி.ஐ. பொதுச் செய லாளர் திரு.தெகலான் பாகவி, திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் தோழர் விடுதலை இராசேந்திரன், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு.கலி.பூங்குன்றன, எழுத்தாளர் சூரியதீபன், எழுத்தாளர் அருணன். தோழர் தியாகு (த.தே.வி.இ) உள்ளிட்ட பல்வேறு அமைப்புத் தலைவர்கள் கண்டன உரையாற்றினர். எழுத்தாளர் இரா.தெ.முத்து நிகழ்வை நெறிப்படுத்தினார். கருத்துரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பின் சார்பில், ஆவணப்பட இயக்குநர் ஆர்.பி.அமுதன் அறிமுகவுரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசியப் பேரியக்கம் சார்பில், கலந்து கொண்டு பேசிய தலைவர் தோழர் பெ.மணியரசன் பின்வருமாறு பேசினார்:

“எழுத்தாளர் பெருமாள் முருகன் அவர்களை அச்சுறுத்திய ஆரியப் பார்ப்பனிய பா.ச.கவன்முறைக் கும்பல்களை கருத்துரிமைப் பறிப்பாளர்களைக் கண்டித்து நடைபெறுகின்ற இந்த ஆர்ப்பாட்டத்தை ஒருங்கிணைத்தத் தோழர்களுக்கு முதலில் எனது பாராட்டுகள்!

அவருக்கு ஆதரவாக இங்கு சென்னையிலும் தில்லியிலும் ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன. உலகெங்கிலிருமிருந்து இணைய தளங்களின் வழியே, ஆதரவுக் குரல்கள் வெளிப்படுகின்றன. எனவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, எழுத்தாளர் பெருமாள் முருகன், தான் எழுதப் போவதில்லை என அறிவித்த முடிவை திரும்பப் பெறவேண்டும். பழையபடி எழுத வர வேண்டும்.



இந்த ஆதரவுக்குரல்களை கணக்கில் கொண்டு, மேலும் துணிச்சலாக எழுத வர வேண்டும்.

கணவன் மனைவிக்கு அப்பாற்பட்டு வெளியில் பாலுறவு வைத்துக் கொள்வது பல காலமாக இருந்துள்ளது. கேரளாவில், அதிகாரம் படைத்த நம்பூதிரிகளின் வாயிலாக குழந்தைகள் பெற்ற, நாயர் குடும்பங்கள் இருந்தன. டி.எம்.நாயர் அவர்களேகூட ஒருமுறை, சென்னை எழும்பூர் ஸ்பர்டாஸ் சாலையில் பேசும்போது, “எனது உடம்பில் ஓடுகின்ற இந்த இரத்தம் என் தந்தைக்குச் சொந்தமானது என்று உறுதியாகக் கூற முடியாது. ஒரு நம்பூதிரிக் குச் சொந்தமானதாக இருக்கலாம்“ என்ற கூறியிருக் கிறார். அந்தளவிற்கு, சமூகக் கொடுமைகள் ஒரு காலத்தில் இருந்தன. அதற்காக, அந்த ஒட்டுமொத்த சமூகத்தையும் இழிவுபடுத்திவிட முடியுமா? அந்த நாயர்கள் முன்னேறவில்லையா? சுயமரியாதை உள்ள வாழ்வு வாழவில்லயா?

காவிரிப்பூம்பட்டினத்தில் இயற்பகை என்ற ஒரு வணிகர். அவர் பெரும் வள்ளல். யார் எதைக் கேட் டாலும் தன்னிடம் உள்ளதைக் கொடுத்து வந்தார். ஒருநாள் ஒரு பார்ப்பனர். இயற்பகையின் மனைவியைத் தானமாகக் கேட்டார். இயற்பகை தன் மனைவியைத் தானமாகக் கொடுத்து விட்டார். பார்ப்பனர் வடிவில் வந்தவர் சிவபெருமான் என்கிறார் சேக்கிழார்.

இயற்பகை தன் மனைவியைப் பார்ப்பனர்கக்குக் கொடுத்ததையும் அப்பெண்ணை அப்பார்ப்பனர் அழைத்துக் கொண்டு போவதையும் பார்த்த ஊர் மக்கள் பார்ப்பனரைத் தடுத்து, பெண்ணை மீட்க முயல்கின்றனர். இயற்பகை வாள் கொண்டு ஊர்மக்களை வெட்டிச் சாய்க்கிறார். பல கொலை கள் விழுகின்றன. இக்கதை சேக்கிழாரின் பெரிய புராணத்தில் வருகிறது. அதற்காகப் பெரிய புராணத் தைத் தடை செய்யச் சொல்ல முடியுமா? அந்நூலை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

இலக்கியங்களில் அந்தந்த காலகட்டத்தில் பதியப்படும் கருத்துகள், அச்சமூகத்தில் வழக்கத்தில் இருந்திருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். அதற்காக அந்த இலக்கியத்தையே எரித்துவிட வேண்டும் என்பதில் என்ன ஞாயம் இருக்கிறது?

குந்திதேவிக்கு கர்ணன் எப்படிப் பிறந்தான்? அண்மையில், மும்பையில் ரிலையன்சு மருத்தவ மனைத் திறப்பு விழாவில் பேசிய, இந்தியப் பிரதமர் மோடி, கர்ணன் அந்த காலத்திலேயே. வெளியில் கருவாகி பிறந்தவர் என்றார். குந்தியின் கர்ப்பப் பையில் கருவாக இல்லாமல் வேறு முறையில் பிறந்தவர் கர்ணன் என்று தெரிவித்தார். பெருமாள் முருகன் எழுதியதை எதிர்க்க உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? சூத்திரர்கள் தாசி மக்கள் என்று குறிப்பிட்ட பார்ப்பனிய சக்திகளுக்கு, திருச்செங்கோடு திருவிழா பாலுறவு பற்றிப் பேச என்ன தகுதி இருக்கிறது?

இந்துத்துவா என்பது வெறும் மதவாதம் அல்ல. அது, ஆரிய இனவாதம்! பார்ப்பனிய மேலாதிக்கத் தைத் திணிக்கும் வர்ணாசிரம வாதம். ஐரோப்பிய தாராளவாதத்தைத் திணிப்பது. இந்துத்துவா! அதனைத் தமிழகத்தில் வளர்த்தெடுக்க. இங்குள்ள கருணாக்கள் உதவியுடன் பார்ப்பனிய சக்திகள் வருகின்றன.

எழுத்தாளர் பெருமாள் முருகனுக்கு ஆதரவாக நான் பேசுவதில் ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. காரணம், எனக்கு, எழுத்தாளர் பெருமாள் முரு கனின் எழுத்து மீது விமர்சனங்கள் உள்ளன. மாற்றுக் கருத்துகள் உள்ளன. அவரது படைப்பிலக் கியப் பாணி குறித்ததே எனது விமர்சனம்! ஆனால், அந்த பாணியில் எழுதுவதற்கு எழுத்தாளர் பெருமாள் முருகனுக்கு முழு உரிமையுண்டு. அவரது, கருத்துரிமைக்கு நாங்கள் ஆதரவாக நிற்கிறோம்!

இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ள எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள். எல்லோரும் கருத்துருவாக்கம் செய்யும் இடத்தில் இருக்கிறீர்கள். எனவே, கருத்துரிமைக்கு ஆதரவான கருத்து நிலைகளை உருவாக்குங்கள் எனக் கூறி, இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த அனைவருக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்! நன்றி! வணக்கம்!“ இவ்வாறு தோழர் பெ.மணியரசன் பேசினார்.

முன்னதாக, எழுத்தாளர் பெருமாள் முருகனுக்கு ஆதரவு தெரிவித்து. அங்கு வைக்கப்பட்டிருந்த பதாகையில் தலைவர்கள் அனைவரும் கையெழுத் திட்டனர். ஆர்ப்பாட்டத்தில், திரளான எழுத்தா ளர்களும், சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்ட னர். தமிழ்த் தேசியப் பேரியக்கம் சார்பில், தமிழ்க் கலை இலக்கியப் பேரவைச் செயலாளர் தோழர் நா.வைகறை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் அ.ஆனந்தன். தமிழக இளைஞர் முன்ன ணித் தலைவர் தோழர் கோ.மாரிமுத்து, பொதுச் செயலாளர் தோழர் க. அருணபாரதி, பொதுக்குழு உறுப்பினர் தோழர் தீந்தமிழன், மகளிர் ஆயம் தோழர் ம.இலட்சுமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ◆

பொன்முடி

தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் டிவி நிகழ்ச்சிகளை முறைப்படுத்த உத்தரவிட வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனுவிற்கு பதிலளிக்க, மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம், இந்திய பிரஸ் கவுன்சில், உள்ளிட்ட அமைப்புகளுக்கு உச்ச நீதி மன்றம் அறிவிக்கை அனுப்பியுள்ளது.

இது தொடர்பாக ஒரு தொண்டு நிறுவனம் தாக்கல் செய்த மனுவில் பத்திரிகைகளைக் கட்டுப் படுத்த இந்திய பிரஸ் கவுன்சில் இருப்பதைப் போல், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை முறைப்படுத்த எந்த ஒரு அரசுத் துறையும் இல்லை. திரைப்படங்களைத் தணிக்கை செய்ய தணிக்கைக் குழு இருப்பதைப் போல் ஒலி, ஒளி சார்ந்த தொலைக்காட்சி நிகழ்ச்சி களைத் தணிக்கை செய்ய எந்த அமைப்பும் இல்லை. ஆட்சேபகரமான கருத்துகளைத் தெரிவிக்கும் இணையதளங்கள் உடனடியாக தடை செய்யப்படு வதைப் போல், டிவி. நிகழ்ச்சிகளுக்கு உடனடி தடை விதிக்க மத்திய அரசிடம் போதிய சட்டம் இல்லை.

இதுபோன்ற நிகழ்ச்சிகளை வெளியிடும் டி.வி. சேனல் களின் அங்கீகாரத்தை ரத்து செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசின் அலட்சியப் போக்கால் நிகழ்ச்சிகள் வரம்பு களை மீறுகின்றன. அதன் காரணமாக ஆதரவான செய்திகள் வெளியிட பணம் பெறும் நிகழ்வுகளும் (பெய்டு நியூஸ்) மிரட்டிப் பணம் பெறும் நிகழ்வு களும் அதிகரித்து வருகின்றன. மூட நம்பிக்கை, தவ றான வழிகாட்டுதல்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சி கள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப் பட்டு வருகின்றன. அவற்றைக் கண்காணித்து முறைப் படுத்த மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பொது நல மனுவை விசாரித்த உச்ச நீதி மன்றம் இதற்குப் பதிலளிக்க மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம், மத்திய சட்ட அமைச்சகம், இந்திய பிரஸ் கவுன்சில், தேர்தல் ஆணையம் உள் ளிட்ட தொலைக்காட்சி கட்டுபாட்டு தனியார் அமைப் புகள் ஆகியவற்றுக்கு உச்ச நீதிமன்றம் அறிவிக்கை அனுப்ப உத்தரவிட்டுள்ளது.



# மூடநம்பிக்கைகளை புகுத்தும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்: மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் அறிவிக்கை




தமிழர் திருவிழா!

சென்னை கே.கே.நகரில் உள்ள சிவன் பூங்காவில், 133வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஸ்டார் எம். குணசேகரன் அவர்களது ஒருங்கிணைப்பில், தமிழர் திருநாளாம் பொங்கல் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

பூங்கா முழுவதும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சிறுவர் சிறுமியர் விளையாடு வதற்காக பல விளையாட்டுச் சாதனங்கள் இடம் பெற்றிருந்தன. ஆடல், பாடல் போன்ற கலைகளை தமிழகத்தின் தலைசிறந்த கலைஞர்கள் மேடையில் நிகழ்த்தினர்.

விழாவை இ. பவளவண்ணன், கா. அய்யனார், எம். இராஜேந்திரன், வேல். அண்ணாதுரை, எ. சரவணன், தி. சாத்தையா, தி. இராமதாஸ், ஆர். முருகேஷ், சத்யா தோட்டம் கல்யாணராமன், எ. ஆர். இனியன், எம். ஆர். எம். அன்சாரி, எம். முகம்மது பாக்கியம், கே. பிரவீன், ஸ்ரீராம் ஆகியோர் முன்னின்று சிறப்பாகச் செய்திருந்த னர்.



சிங்க முழக்கம் திங்களிதழின் மூன்றாம் ஆண்டுவிழாவில் முற்றம் ஆசிரியர் விசவனூர் வே. தளபதி கலந்து கொண்டு வாழ்த்தினார். அருகில் சிங்க முழக்கம் ஆசிரியர் திரு. பிரகாஷ், பேச்சாளர் சிந்தைவாசன்.


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**

தமிழ் வாழ்க

திருக்குறள் நம்மறை

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலக அமைப்பாளர்

## பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன்

## 80 ஆம் அகவை முத்துவிழா

# தமிழ்த்திருவிழா

# அழைப்பிதழ்



நாள் : தமிழாண்டு தி.பி. 2046 தை 27
10.2.2015 செவ்வாய், மாலை 5.00 மணி

இடம் : தந்தை பெரியார் திடல்
நடிகவேள் எம்.ஆர். இராதா அரங்கம்
ஈ.வி.கே. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை-7

MUTRAM - Tamil & English Monhtly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 - 16.
Date of Publication 7th of every month

சிந்தனை மறுமலர்ச்சியின் பேரெழுச்சிக் களமாய்
வளர்கிறது

# சங்கம் 4

## தமிழ்த் திருவிழா

## உலகின் மிகப் பெரிய தமிழ் விழா!

- பத்து நாட்கள்
- நூறு அறிஞர்கள்
- அதிர்வலைகள் உருவாக்கும் விவாதங்கள்

மாசி 1 முதல் 10 வரை
பெப்ருவரி 13 முதல் 22 வரை

அரங்கு : 'முத்தமிழ் மன்றம்'
திருவாடுதுறை T.N. ராஜரெத்தினம் அரங்கு,
92-A, துர்காபாய் தேஷ்முக் சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை - 600 028.

**உங்கள் வருகையை முன் பதிவு செய்யுங்கள்.**

மின் அஞ்சல் : info.sangam4@gmail.com